
# வார்த்தை வாசல்



## உவமைக்கவிஞர் சுரதா

# வார்த்தை வாசல்

கவிஞர் சுரதா

**சுரதா பதிப்பகம்**

56-அ, டாக்டர் இலக்குமணசாமி சாலை
கலைஞர் கருணாநிதி நகர்
சென்னை-6000 78.

# பதிப்பு விளக்கம்


| | | |
|---|---|---|
| நூல் | — | வார்த்தை வாசல் |
| ஆசிரியர் | — | உவமைக் கவிஞர் சுரதா |
| வெளியீடு | — | சுரதா பதிப்பகம்<br>56-அ, டாக்டர் இலக்குமணசாமி<br>சாலை, கலைஞர் கருணாநிதி நகர்,<br>சென்னை-6000 78. |
| மொழி | — | தமிழ் |
| பதிப்பு | — | முதற் பதிப்பு |
| தாள் | — | 11.6 White Printing |
| அளவு | — | 18 × 12.5 cm. |
| எழுத்து | — | 10 புள்ளிகள் |
| பக்கம் | — | 80 |
| படிகள் | — | 1200 |
| அச்சகம் | — | ஜீவன் அச்சகம்<br>சென்னை-600 005 |
| விலை | — | 7 ரூபாய்கள் |

| | |
|---|---|
| 1887 | வே. கி. நாராயணசாமி பிள்ளை<br>செய்யுள் திரட்டு |
| 1984 | சுரதாவின்<br>வார்த்தை வாசல் |

*சென்ற நூற்றாண்டில் முதன் முதலாகத் தன்னுடைய அணிந்துரைகளைத் தொகுத்து "வே.கி. நாராயணசாமி பிள்ளை செய்யுள் திரட்டு" என்று வெளியிட்ட தமிழறிஞர் வே.கி. நாராயணசாமி பிள்ளை அவர்களுக்கு இந்நூலைப் படைக்கின்றேன்.*

**சுரதா**

***25-12-84***

# பாதை

ஆன்றோர் பலர் பல நூல்களுக்கு அணிந்துரைகள் வழங்கியுள்ளனர். அப்படி வழங்கிய அணிந்துரைகளை ஒரே நூலாகத் தொகுத்துக் கவிதை அணிந்துரை நூலாகத் தமிழ் மொழியில் வெளியிட்டு வழிகாட்டியவர் பெரும் புலவர் வே. கி. நாராயணசாமிபிள்ளை அவர்கள்தாம்.

அவர் வெளியிட்ட ஆண்டு 1887.

நானும் பலருடைய நூல்களுக்கு அணிந்துரைகளை வழங்கியுள்ளேன். அவற்றுள் கவிதை அணிந்துரைகளை மட்டும் தொகுத்து இந்த ''வார்த்தை வாசலை'' உங்களுக்காக உருவாக்கியுள்ளேன்.

தமிழறிஞர் வே. கி. நாராயணசாமிபிள்ளை அவர்களது அணிந்துரைத் தொகுப்பு நமது நாட்டுக்குப் பயன் தந்துள்ளது.

அதே பயனை இந்த ''வார்த்தை வாசலும்'' தரும் என்று கருதியே இதனைத் தொகுத்து வெளியிட்டுள்ளேன்.

இந்த வாசலில் உங்களை மகிழ்விக்க மாக் கோலங்கள் மட்டுமே போடப்பட்டுள்ளன; சுண்ணாம்புக் கோலங்களில்லை.

சிக்கலான கோலங்களில்லை; சிந்தனையைத் தூண்டுகின்ற செறிவான கோலங்களே இங்கு மிளிர்கின்றன.

என்னுடைய ''வார்த்தை வாசலில்'' நான் போட்டுள்ள இந்தப் புள்ளிக் கோலங்கள் பலருடைய மனத்தைப் பண்படுத்தும், என்று உறுதியாக நம்புகின்றேன்.

சுரதா

25-12-84

# இனிக்கும் நினைவுகள்



எத்தனையோ ஆசையுண்டு நமது நெஞ்சில் ;
எத்தனையோ ஏக்கமுண்டு நமது வாழ்வில் ;
எத்தனையோ எண்ணுகின்றோம் ; எண்ணும் எண்ணம்
எல்லாமே இனிப்பதில்லை; கசப்ப தில்லை;
ஒத்தமனம் கொண்டுவிட்டால் காதல் ஆங்கே
ஊற்றெடுக்கும்; நினைவெல்லாம் இனிக்கும்; கல்விச்
சத்துடையோர் தொடுக்கின்ற பாடல், நன்கு
சாதிக்கும்; தலைமைக்கும் தலைமை தாங்கும்.

பக்குவத்தைப் பழுத்தபழம் காட்டும்; நல்ல
பாடல்களை அப்பாடல் கருத்து காட்டும்.
தக்கவர்தம் கவிதைகளே தமிழைக் காக்கும்.
தமிழ்நுட்பம் அறியாதார் சருகுச் செய்யுள்
மக்களிடம் போய்ப்பழகும் இந்த நாளில்,
மணிக்கவிஞர் எழில்முதல்வன் வடித்த பாடல்,
விக்கலுக்கு நீர்போன்ற பாட லாகும்;
வீணைக்கும் நரம்பாகும்; கரும்பு மாகும்.

அல்லிமலர் போன்றவளாம் அழகுப் பெண்ணை
ஆசையொடு புத்தகத்தில் ஆட விட்டும்;
கல்மலையின் மெல்லியமே லாடை போன்று
காட்சிதரும் அருவியொன்றை ஓட விட்டும்;
மல்லிகையைப் பந்தலிலே படர விட்டும்;
மடலேறும் வண்டுகளைப் பாட விட்டும்;
நெல்விளையும் தகட்டூர்வாழ் கவிஞர், செய்யுள்
நிதிநமக்குப் புதிதாக வழங்கி யுள்ளார்.

வனந்தெரிந்த இடத்தில்போய் மேயும் மானை
'வற்கலையே' என்றழைக்க வேண்டின்; சொல்லின்
இனந்தெரிந்து வைத்திருத்தல் வேண்டும். 'வெய்யோன்
இழைக்கும்நாள்' என்றெழுத நுட்பம் வேண்டும்.
'சினந்தணிந்த செங்கதிரோன்' என்று பாடத்
தேன்சங்கப் பாடல்களில் பயிற்சி வேண்டும்.
மனந்திறந்து சொல்லுகின்றேன், சங்க நூலின்
வழிப்புலமை என்னைப்போல் இவர்க்கு முண்டு.

''விலைமோரில் கடைவதற்கு வெண்ணெய் ஏது?
வெறும்பாட்டில் சுவையேது? வண்ணப் பச்சை
இலைமாலை மணந்தருமோ? சொல்வீர்?'' என்றே
எழில்முதல்வன் கேட்கின்றார். நானும் கேட்பேன்.
கலையாக்கம் கருத்தாழ மெல்லாம், போலிக்
கவிதைகளில் குடியிருக்க வருவ தில்லை.
பலர்போற்றும் புலமையிலான் தொடுக்கும் பாடல்
பகுதியைப்போல் நிலைத்திருக்கப் போவ தில்லை.

குழல்முதல்வன் கீதையினுல் கீர்த்தி பெற்ருன்;
குருபாதன் சதகத்தால் பெருமை பெற்ருன்.
கழல்முதல்வன் அதிவீர ராமன் என்பான்
கனிந்தசுவைக் காவியத்தால் ஆவி பெற்ருன்.
எழில்முதல்வன் இந்நூலின் மூலம், தக்க
இடம்பெற்ருர். மிகச்சிறந்த செய்யுள் செய்யும்
தொழில்முதல்வன் எனும்தகுதி பெற்ருர். என்றும்
தூங்காத பெரும்புகழை விரைவில் பெற்ருர்.

பூமாலை அசைந்தாடும் பக்கம் ஈக்கள்
போவதில்லை. பலரிங்கே ஈக்கள் போன்று
பாமாலை என்ருலே தொடுவ தில்லை.
பதிப்பகமும் மதிப்பளித்து வளர்ப்ப தில்லை.
காமாசோ மாவென்றே எழுது வோரின்
கதைபடிக்கும் பேர்வழிகள், இந்நூல் என்ன
தேமாவா ? புளிமாவா ? என்ருல், நூலைத்
திறந்துபடித் தால்பிறகு தெரியும் சேதி !

---

பேராசிரியர் எழில் முதல்வன், எம். ஏ., அவர்கள் எழுதிய 'இனிக்கும் நினைவுகள்' என்னும் கவிதை நூலுக்கு 1966-ஆம் ஆண்டில் வழங்கிய அணிந்துரை.

# மணிப்புறா



ஓசையிலே உருப்பெற்ற தாகக் கூறும்
  உலகத்தில்; உறவாடும் ஆண்பெண் வாழ்க்கை
ஆசையிலே ஆரம்பம். இன்பம் துன்பம்
  அத்தனைக்கும் நாம்கட்டுப் பட்ட மக்கள்.
பேசுவதோ மிகப்பெரிய மானம்; ஆனால்
  பேணுவதோ பெருங்காமம்; எச்சில் இன்பம்!
மாசுமறு வில்லாத நிலவு மில்லை;
  மாந்தர்களுள் குற்றமற்றார் யாரு மில்லை!

நரைத்துவரும் முதுமையிலும் காம வேகம்
  நமைவிட்டு விடுவதில்லை என்றால், இன்பக்
குருத்துவரும் பருவத்தில் அழகு மிக்க
  கோதையரை விடுவாரோ காமம் கொண்டோர்?
சிரித்துவந்தாள் மாதொருத்தி, வெறிவாய் கொண்டோன்
  சேர்த்தணைத்துக் காரியத்தை முடித்து விட்டான்.
மருத்துவனால் கற்பழிக்கப் பட்ட மங்கை
  வாழ்வதற்கு விபசாரி யாகி விட்டாள்.

விலைமகள்போல் அவள்வாழ்ந்தாள் எனினும், நெஞ்ச
வீதியிலே ஒருவனைத்தான் நடக்க விட்டாள்.
மலைமலராம் செங்காந்தள் கரத்தி னாலே
மனத்துக்குள் நுழைந்தவனைத் தழுவு தற்குச்
சிலையழகி காத்திருந்தாள். முடிவில் மங்கை
சிறுதுரும்பு போலாகி மாண்டு விட்டாள்.
கலையழகன் அவள்பிணத்தைக் கண்டான் ; கத்தும்
கடற்கரையில் அன்னவனும் மாண்டு போனான்.

வெள்ளைநிறம் புரிகின்ற புறாவைப் போல
விசபாரி உயிர்விட்டாள் அவனுக் காக.
தெள்ளுதமிழ் கற்றோனும் ''என்றன் வாழ்வும்
தீரட்டும்'' எனச்செத்தான் அவளுக் காக.
உள்ளபடி காதலித்த மாதும், உண்மை
உணர்ந்தோனும் மரணத்தால் ஒன்று பட்டார்.
துள்ளியெழும் கருங்கடலின் அருகே கண்ணீர்த்
துன்பத்தைக் கதைநிகழ்ச்சி காட்டக் கண்டோம்.

சடங்குமனம் கொண்டோரை எதிர்த்து வெல்லும்
சக்திபெற்ற தமிழ்ச்செல்வன் அவர்கள், நெஞ்சைத்
தொடுங்கதையாய் இக்கதையை எழுதி, மக்கள்
தூக்கத்தைப் போக்குகின்றார் திறமை யோடு !
நெடுங்கதைகள் மூங்கிலைப்போல் நீட்டம் காட்டி
நிற்பதனால் பயனில்லை ; மலைநி லத்தில்
படும்பொருள்போல் பயன்விளைக்க வேண்டும் ; அந்நூல்
பாராட்டும் உரைநடையால் விளங்க வேண்டும்.

தரைச்செல்வம் பலவாகும். அவற்றுள் நண்பர்
    தமிழ்ச்செல்வன் தந்துள்ள கதையின் செல்வம்
உரைச்செல்வம் ; புதியபல கருத்துச் செல்வம் ;
    உண்மையிலே நம்மவர்க்கு வைகை ஆற்றங்
கரைச்செல்வம்; காவிரியின் செல்வம் ; இந்தக்
    காலத்து மாந்தரெலாம் மதிக்கும் செல்வம்;
வரச்சொல்லி வள்ளல்தரும் செல்வம் ; காதல்
    மங்கைதரும் சுகம்போன்ற செல்வ மாகும்.

---

மாரா, தமிழ்ச்செல்வன் எழுதிய 'மணிப்புறு' என்னும் நாவலுக்கு 1966-ஆம் ஆண்டில் வழங்கிய அணிந்துரை.

# திருமதி சிற்றம்பலம்

அரியபல கட்டுரைகள் ஏடுகளின்
அகலத்தை அளந்த துண்டு ;
கருவிமழை போற்சிறந்த காவியங்கள்
எழுந்தவொரு கால முண்டு ;
பருவநிலை மாறுதல்போல் சிந்தனையில்
புதுமைபல படர்ந்த தாலே
நுரைமணிகள் ஏந்திவரும் சிற்றருவிச்
சிறுகதைகள் நுழைதல் கண்டோம்.

ஏட்டில்நடை பெறுங்கவிதை கட்டுரைகள்,
சிறுகதைகள் எல்லாம் ; தீயின்
சூட்டில்நடை பெறும்சமையல் பக்குவத்தைப்
போன்றதுதான், சுருங்கச் சொன்னால்,
நாட்டில்நடை பெறும்நிகழ்ச்சி ஒவ்வொன்றும்
சிறுகதையாம் ; நல்லோர் செய்த
பாட்டுநடைத் தேனமுதாம் ; உரைநடையே
பொதுமக்கள் பசிக்குச் சோறும்.

அதிமதுரக் காவியத்தால் அத்தனையே
    ரையுந்தூக்கி அடித்தான் கம்பன்.
இதுவரையில் செயங்கொண்டான் பரணியினை
    வெல்லும்நூல் எழுந்த தில்லை.
கதைவழியில் புதுவழியைத் தமிழர்க்குக்
    காட்டியவர் கல்கி என்றால்;
புதியநடை, புதியவழி, சிறுகதையில்
    புகுத்தியவர் புதுமைப் பித்தன்.

முத்தனுக்குப் பின்முனியன் உழுதுபயிர்
    செய்வதுபோல் முதிர்ந்த கல்விப்
பித்தனுக்குப் பின்வந்து சிறுகதைகள்
    பயிர்செய்யும் பெரியோன் தந்த
சித்திரப்பெண் 'திருமதிசிற் றம்பல'த்தை
    நான்தொட்டுச் சிலிர்த்தேன்! நல்ல
புத்தகத்தை ஏழெட்டு முறைபடிப்பேன்;
    அவ்வாறே புரட்டிப் பார்த்தேன்.

திறன்தோய்ந்த சிந்தனையால், தேன்தோய்ந்த
    தலைப்புகளால், செழித்த சொல்லால்,
சிறந்தோங்கும் சிறுகதைகள் பலஎழுதிப்
    பரிசுபெற்ற திறமை யாளர்
அறந்தாங்கிப் பூவைநகர் எழுத்தாளர்
    ஆறுமுகம் அவர்கள்; வேங்கை
மறம்தாங்கும் வீரர்விழி போற்சிறந்த
    சிறுகதைகள் வழங்கி யுள்ளார்.

இரவல்நடை எழுத்தாளர், வான்கோழி
எழுத்தாளர், இவர்கள் எல்லாம் ;
ஒருவர்நடை போலெழுதிப் பிறர்கதையின்
பெயர்மாற்றி உயர்வு காண்பர்.
அருவிநடை எழுத்தாளர் பூவைநகர்
ஆறுமுகம் அளித்த நூலில்,
இரவல்நடை எச்சில்நடை ஏதுமில்லை;
முகமூடி எழுத்து மில்லை.

அலைவரம்பு மீறிவிடின் நெய்தல்நிலப்
பகுதியெலாம் அழிந்து போகும்.
கலைவரம்பு மீறிவிடின் சமுதாயச்
சிந்தனைகள் கருகிப் போகும்.
இலைநரம்புச் சிறுகதைகள் பதினொன்கைக்
கொண்டிருக்கும் இந்நூல், வாழ்க்கை
நிலைவரம்பை மீறவில்லை எனக்கூறி
இத்தோடு நிறுத்து கின்றேன்.

---

பூவை. எஸ். ஆறுமுகம் அவர்கள் எழுதிய 'திருமதி சிற்றம்பலம்' என்னும் சிறுகதைத் தொகுப்பு நூலுக்கு 1966-ல் வழங்கிய அணிந்துரை.

# ரம்போலா கவிதைகள்

நாட்டைக் கெடுத்திடுவர்—அவர்
நஞ்சினை ஒத்தவர்; நெஞ்சம் நெளிந்தவர்
வீட்டைக் கெடுத்திடுவர்—அறி
வீணரெல் லாம்தமிழ் வாணரென் றெண்ணியே
ஏட்டைக் கெடுத்திடுவர்—வெறும்
எண்ணிக்கை யாளராம் கிண்ணிக் கவிஞர்கள்
பாட்டைக் கெடுத்திடுவர்—பிறர்
பாட்டுக்குள் ளேவிளை யாட்டு நடத்துவர்.

ஓலைக் கவிதைகளாம்—தமிழ்
ஓசை வளர்த்திடும் ஆசைக் கவிதைகள்
சோலைக் கவிதைகளாம்—சிறு
சோற்றுக்கும் கூழுக்கும் பாடும் கவிதைகள்
வேலிக் கவிதைகளாம்—பணம்
விட்டெறிந் தால்சிலர் கட்டும் கவிதைகள்
கூலிக் கவிதைகளாம்—பிழை
கொண்ட கவிதைகள் நொண்டிக் கவிதைகள்.


கட்டடம் கட்டுபவன்—ஒரு
கல்லொடு மற்ெருரு கல்லினைச் சேர்த்ததை
ஒட்டிடும் தன்மையைப்போல்—பதம்
ஒட்டுவ தாலுரு வாகும் தமிழினில்
பட்டமும் பெற்றவராம்—இவர்
பாட்டுப் படையல்நம் நாட்டுத் துறைமுகப்
பட்டினம் பெற்றகலம்—இது
பச்சைத் தமிழர்கள் மெச்சிடும் புத்தகம்.

நாட்டின் விடுதலையை—நிலை
நாட்டிட ரம்போலா தீட்டிய பாட்டுகள்
கோட்டைக் கதவுகளாம்—புகழ்
கொண்ட விருத்தங்கள் சந்தச் சிலம்புகள்.
ஏட்டில் படுத்திருக்கும்—தமிழ்
எண்ணங்கள் பண்பட்ட வண்ணங்க ளாம்; இவை
ஊட்டும் உணர்ச்சியினுல்—தனி
ஊக்கம் பிறந்திடும்! தூக்கம் பறந்திடும்!

ஒற்றை நிலாவெளிச்சம்—பல
ஊருக்கும் நாட்டுக்கும் ஓசை உலகுக்கும்
முற்றும் பயன்படல்போல்—மொழி
மூதறி வாளரின் பாடல் பயன்படும்.
வெற்றி விளைச்சலிது—தமிழ்
வித்தை அறிந்தவர் முத்திரை நூலிது.
கற்றுத் தெளிந்தவர்கள்—தரும்
கற்பனைப் பாடல்கள் நெற்பயிர் அல்லவோ?

---

பேராசிரியர் ரம்போலா மாஸ்கரானஸ் அவர்கள் எழுதிய 'ரம்போலா கவிதைகள்' என்னும் கவிதைத் தொகுப்பு நூலுக்கு 1966-ஆம் ஆண்டில் வழங்கிய அணிந்துரை.



ஓவியத்தால் அழகுவரும் ; மாந்தர் உண்ணும்
    உணவதனால் உடல்செழிக்கும் ; உறுதி சேரும் ;
ஆவியொத்த காதலினால் அணுக்கள் தோறும்
    அமுதூறும் ; வாழ்நாளும் வளரும்; நல்ல
காவியத்தால் புலனின்பம் பெருகும் ; கல்விக்
    கனவுவரும் ; விழிவீடு வெளிச்ச மாகும் ;
பாவியொத்தோன் என்றாலும் , அவனைப் பற்றிப்
    பாடிவிட்டால் இலக்கியத்தில் நிலைத்து நிற்பான்.

சிவன்பெரியோன் என்றுரைப்பர் சைவர். இல்லை
    திருமாலே மிகப்பெரியோன் என்பர் மற்றோர்.
அவன்பெரியோன் இவன்பெரியோன் என்னும் சத்தம்
    அரசியலில் அன்றாடம் எழுந்திட் டாலும்,
எவன்பெரியோன் எனக்கேட்டால், உலகம் போற்றும்
    இலக்கியங்கள் படைப்பவனே பெரியோன் ஆவான்.
எவன்பெரியோன் என்றாலும் ஒழுக்கம் வேண்டும்.
    ஏனென்றால் ஒழுக்கந்தான் வாழ்வின் வாசல்.

மிஞ்சுபுகழ் மாயூரம் முனிசிப் பாட்டும் ;
விதிவகுத்த வடலூரார் பெய்த பாட்டும் ;
செஞ்சிநகர் ஏகாம்பர முதலி யாரின்
சீர்திருத்தக் கும்மிகளும் ; சந்தப் பாட்டும் ;
பஞ்சுபடும் பாடுபட்ட சுப்ர மண்ய
பாரதியின் பாடல்களும் ; பாவின் வேந்தர்
கொஞ்சுதமிழ்ப் பாடல்களும்; இந்த நாட்டின்
கூனலுக்கு மருத்துவமாம் ; நல்ல தீர்ப்பாம் !

பிட்டுக்கு மண்சுமந்த கதையும் ; தெய்வம்
பிரம்பொன்றால் அடிபட்ட கதையும் ; யாப்பாம்
கட்டுக்குள் அடங்குவதால், பழமை பேசும்
காவியத்தால் நமக்கென்ன நன்மை ? நீண்ட
நெட்டிக்கு நாம்பூசும் புதிய சாயம்
நீடித்தா நிலைத்திருக்கும் ? மலடிப் பாடல்
பட்டுப்போய்க் கெட்டுப்போய் விடுமே யன்றிப்
பாராட்டோ செல்வாக்கோ பெறுவ தில்லை.

பாவேந்தன் குடிசையிலே குடியி ருப்பான்.
பாட்டிருக்கும் ; அவன்கரத்தில் சீட்டி ருக்கும்.
கோவேந்தன் கோட்டையிலே குடியி ருப்பான்.
கோலிருக்கும் ; அவன்கரத்தில் வேலி ருக்கும்.
மூவேந்தன் எனுமிந்தக் கவிஞர் கையில்
முனைமுறியா வேலில்லை எனினும், என்றும்
நாவேந்தும் தமிழுண்டு ! வீர முண்டு !
நன்றாகக் கவியெழுதும் ஆற்ற லுண்டு.

இக்காலம் சிறுகதைகள் பிறக்கும் காலம்.
எதுகைகளோ மோனைகளோ ஏது மின்றிப்
பொய்க்கோலப் புதுக்கவிதை பிறக்கும் காலம்.
பொய்யோடு பொய்சேர்ந்து பழகும் நாளில்,
தக்கோலத் தமிழ்க்கவிஞர் மெய்ந்நூல் தந்தார்.
தமிழேஎன் உயிரென்னும் இந்த நூலில்
முக்காலச் சிந்தனையும் ; பகைவர் தம்மை
முறியடிக்கும் பாடல்களும் நிரம்ப உண்டு.

பூங்கொத்துப் புத்தகத்தில் முத்து முத்தாய்ப்
புதுப்பாடல் பலவற்றைக் காணு கின்றேன்.
மாங்கொத்தை வரவேற்க வாச லுண்டு.
மணிச்சரத்தை விலைகேட்கப் பெண்டி ருண்டு.
வேங்கைப்பூப் போற்சிறந்த பாட்டுக் கூட்டம்
விளையாடும் இதுபோன்ற புத்த கத்தை
வாங்கத்தான் நம்நாட்டில் ஆட்கள் இல்லை !
வரவேற்றால் தமிழ்க்கவிஞன் வாடு வானோ ?

---

கவிஞர் மூவேந்தன் அவர்கள் எழுதிய "தமிழே என் உயிர்" என்னும் கவிதை நூலுக்கு 1966-ல் வழங்கிய அணிந்துரை.

# இருதய வியாதிகளும் சிகிச்சையும்

ஆதி இலக்கிய நூல்கள்—அவை
ஆழ்கடல் நீந்தும் கலன்கள்;
நீதி இலக்கிய நூல்கள்—அவை
நேர்வழி காட்டிடும் கைகள்;
சாதி இலக்கிய நூல்கள்—அவை
சாக்கடை நீரின் புழுக்கள்;
வீதி இலக்கிய நூல்கள்—சுக
வேட்டையில் தோன்றிடும் நோய்கள்.

மெத்தைக் கதைகளும் பாட்டும்—வெறி
வேகத்தை அல்லவோ ஊட்டும்!
வித்தை நுணுக்கங்கள் இல்லா—வெறும்
வேடிக்கை நூல்களின் மூலம்
புத்தி விளங்குவ துண்டோ?—சுரைப்
பூவில் நறுமணம் உண்டோ?
சித்தம் தெளிந்திட வேண்டின்—குறை
தீர்க்கும் சுவடிகள் வேண்டும்.

சிந்தனைக் கட்டுரை நூல்கள்—பிணி
தீர்க்கும் மருத்துவ நூல்கள்;
சந்திர மண்டலச் செய்தி—மழை
சாத்திரம்; தத்துவம்; தர்க்கம்;
பைந்தமிழ்ச் சொல்லின் விளக்கம்—தமிழ்ப்
பண்ணியல்; மண்ணியல் நுட்பம்;
யந்திர வித்தை விளக்கம்—இவை
யாவும் நமக்கிங்கு வேண்டும்.

தாயின்றி வாழ்பவ ருண்டு—மறு
தாரம் இலாதவ ருண்டு;
சேயின்றி வாழ்பவ ருண்டு—பெருஞ்
செல்வம் இலாதவ ருண்டு;
வாயின்றி ஊமைய ராகி—இந்த
வையத்தில் வாழ்பவ ருண்டு;
நோயின்றி வாழ்பவ ரில்லை—வரும்
நோய்களுக் கும்கணக் கில்லை.

நாயை விரட்டிட வேண்டும்—எனில்
நம்மிடம் கல்லொன்று போதும்
நோயை விரட்டிட வேண்டும்—எனில
நூறு மருந்துகள் வேண்டும்.
தீய பரம்பரை நோய்கள்—தரும்
தீமையை வேரொடு வீழ்த்தும்
ஆயுள் மருத்துவத் தொண்டு—செயும்
அன்பராம் நம்செல்வ ராசன்.

தஞ்சை நகர்செல்வ ராசன்—சுவை
தங்கிய செந்தமிழ் நேசன் ;
கஞ்சி எழுத்தாளர் அல்லர்—வெறும்
காதல் எழுத்தாளர் அல்லர் ;
அஞ்சும் எழுத்தாளர் அல்லர்—தமிழ்
ஆசை எழுத்தாளர் கண்டீர் !
செஞ்சொல் எழுத்தவர் பாதை—பிணி
தீர்க்கும் மருத்துவ மேதை.

கொக்கு விரிக்கும் இறக்கை—நிறம்
கொண்ட மலர்பல உண்டு !
திக்கில் திரிந்திடும் வண்டு—தொடும்
சித்திர நீலங்கள் உண்டு ;
பக்கம் இருக்கும் மரத்தின்—இலைப்
பந்தலில் பொன்மலர் உண்டு ;
மக்கள் குளிக்கும் குளத்தில்—தமிழ்
மங்கலத் தாமரை உண்டு.

கரிய நிறக்கடல் போலே—சிலர்
கண்விழி வட்டம் இருக்கும்.
நரியின் தலையினைப் போலே—தமிழ்
நாட்டின்வெள வால்தலை கண்டீர் !
குருதி நிறைந்த இதயம்—அது
கூம்பிய தாமரை மொட்டாம் !
அரிய உறுப்பாம் இதயம்—அதை
ஆராய்ந்து சொன்னவன் ஹார்வி.

அருமைச் சதைமலர் மொட்டாம்—அதன்
ஆதிக் கதைகளை யெல்லாம்
உரிமைத் தமிழிலோர் நூலாய்ப்—பிணி
ஓட்டும் மருத்துவ வேலாய்ப்
பெருமைத் திருமகன் தந்தார்—புகழ்
பெற்றிடும் வெற்றிநூல் தந்தார்.
அருமை மருத்துவ நூலாம்—இதை
ஆணிவேர் மாமரம் என்பேன்.

காடு செழித்திட வேண்டும்—எனில்
கார்முகில் பெய்திட வேண்டும்.
நாடு நலம்பெற வேண்டும்—எனில்
நல்ல தலைவர்கள் வேண்டும்.
வீடு விளங்கிட வேண்டும்—எனில்
வேல்விழி மங்கையர் வேண்டும்.
ஏடு புகழ்பெற வேண்டும்—எனில்
இப்படி நூல்தர வேண்டும்.

---

டாக்டர் எச். செல்வராஜ் அவர்கள் எழுதிய 'இருதய வியாதிகளும் சிகிச்சையும்' என்னும் மருத்துவ நூலுக்கு 1968-இல் வழங்கிய அணிந்துரை.

# பாட்டுத் தோட்டம்

மூத்துப் பூத்த மூதாட்டி ஔவையும்;
அச்சுத்தேர் ஏறிய அதிவீர ராமனும்,
தேரூரில் பிறந்த தேசிக விநாயகம்
பிள்ளையும், அந்தோணி சாமி பிள்ளையும்,
பாரதி யாரும், பாரதி தாசனும்,
சிறுவர்க்குப் பாட்டுச் சிந்தனை வழங்கிப்
பிறர்க்குவழி காட்டிய பெரிய கவிஞர்கள்.

மூத்த தலைமுறை முடிவுற்ற பின்னர்
அடுத்த தலைமுறை அரும்பி மலர்ந்து,
குழந்தைப் பாடல்கள் கொடுப்பதைப் பார்க்கிறோம்.
சிறுவர்க் கேற்ற சிறந்த பாடலை
இந்நாளில் வழங்கும் எண்ணற்ற கவிஞருள்
வண்டு தொடும்பூ வண்ணனும் ஒருவர்.

புதுப்புகழ் நீட்டும் புலவர்போல், எழுத்தில்
புதுமையைக் காட்டும் பூவண்ணன் அவர்கள்,
'புலவர்மகன்' என்னும் புத்தகம் எழுதிப்
பரிந்துரை இன்றியே பரிசு பெற்றவர்.

இந்த நாட்டில் இவரே முதன்முதல்
குழந்தை இலக்கிய வரலாறு கொடுத்தவர்.

இப்படிப் பட்டவர், இளைஞர்க் காகப்
படைத்த சுவடியே பாட்டுத் தோட்டம்.
பாட்டுத் தோட்டத்தில் பாரதி இருக்கிறார்.
பாரதி இருப்பதால் பாரதி தாசனும்
இருந்திட வேண்டும். எனினுமவர் இல்லை!
முத்தமிழ் மோனை முதலில் வந்தபின்
எதுகை வராமல் இருப்பது சரியா?

"அன்னை காவிரித் தாயே—உன்னைப்
பொன்னி என்பது ஏனோ?
மண்ணை நன்கு செழிக்கச் செய்து
பொன்னை விளைக்கச் செய்தாய்—அதை
எண்ணி எண்ணி உழவர் உனக்கு
இட்ட பெயரோ பொன்னி!"

என்றிவர் காவிரிக் கன்னியைக் கேட்கும்
பாட்டின் அடிகள், பழுத்த புலமையைக்
காட்டும் அடிகள்; கற்பனை வீக்கம்!

பிச்சை இடுவதும் பிச்சை எடுப்பதும்
நமக்கவ மானம்! நாட்டுக்கும் ஊனம்
என்னும் கருத்தில் எழுந்துள்ள பாடல்,
சாத்திரப் பழமைக்குச் சரியான சவுக்கடி.

"அறிவியல் கற்பேன்—நான்
அனுதினம் கற்பேன்.
பெரிய விஞ்ஞானி—எனும்
பெயரும் வாங்குவேன்.

சந்த்ர மண்டலம்—நான்
சென்று மீளுவேன்.
வந்து சந்த்ரனின்—பல
விந்தை சொல்லுவேன்."

என்னும் அடிகள், இந்தநூற் ருண்டு
மனிதன்விஞ் ஞானியாய் மாற முயல்கிருன்
என்பதை உணர்த்தும் எண்ணச் சுவடுகள்.

''வேடன் தாங்கல் போகலாம்
வேடன் தாங்கல் போகலாம்
கோடி கோடி பறவை கண்டு
ஆடிப் பாடி மகிழலாம்''

என்று சிறுவர் இடத்தில் உரைப்பதும்,
காரணம் கூறிக் காஞ்சிக் கழைப்பதும்,
பல்லவர் காலத்துக் கல்ரதம் காணப்
புறப்படு மாமல்ல புரத்துக் கென்பதும்
பயன்தரக் கூடிய பயணப் பாடல்கள்.

'நெடுங்கடல் என்பது, நெய்தல் நிலத்தின்
ஓரத்தைக் குறிக்கும் உப்புநீர் விளம்பரம்'
என்றுநான் பாடி இருக்கிறேன். இவரோ,

''நீலக் கடல்
நெளியும் கடல்
நிலத்தை விழுங்கி நிற்குது !

முத்துக் கடல்
மூத்த கடல்
முதுகில் கப்பல் சுமக்குது !''

என்கிருர். நாள்தொறும் ஏங்கும் கடலின்
முதுமையை உணர்த்த மூத்தகடல் என்கிருர்.

குறிப்பிட்ட மூன்றடி கொண்ட பாட்டுநூல்
ஒன்றுநம் நாட்டில் உளதாம் அதன்பெயர்
மூவடி முப்பது. மூவடி முப்பதோ,

இலக்கியக் கிழவர் இடைக்காட ஞரின்
அறிவின் அறுவடை ! அந்நூல் போலவே,

''இலையைப் பறிக்காதே பாப்பா—ஓர்
இலைக்குள்ளும் உணர்வுண்டு ; இன்னலும் உண்டு ;
இலையைப் பறிக்காதே பாப்பா.''

என்றும் ; கிளையை முறிக்காதே என்றும் ;
சீவ காருண்யச் சிந்தனை ஏறிய
மூவடிப் பாடல் முத்திரை பதித்துளார்.

ஏழைப் புலவர்கள் எதிர்பார்த்து நிற்கையில்
'இரும்—பொறும்' என்றே இழுத்தடிக் காதவன்
இரும்பொறை ! அந்தக் கணைக்கால் இரும்பொறை,
விழித்த வீரமும் ; மிக்கபே ராற்றலும் ;
அரசியல் நுணுக்கமும் ; அஞ்சா நெஞ்சமும் ;
கொண்டு விளங்கிய கோமகன் ! படையொடு
முன்னின் றெதிர்த்த மூவனென் பானைக்
கொன்று வீழ்த்திய குகைப்புலி ! களத்தில்
பட்டு வீழ்ந்தோனின் பல்லைப் பிடுங்கிக்
கற்கோட்டை வாயிற் கதவில் பதித்தவன்.

அந்த மன்னனின் சொந்தவர லாற்றைப்
பரிதிமாற் கலைஞரும் பாடலாய் வடித்துளார்.
இந்தக் கவிஞரும் இந்நூலில் தந்துளார்.

இருவரும் தந்துளர் என்ற போதிலும்,
இவரது பாடலில் இருக்கும் எளிமை
அவரது பாடல் அடிகளில் இல்லை.

மணல்வீடு கட்டி மகிழும் சிறுர்க்குப்
பச்சை மரத்தின் உச்சியைக் காட்டி,

அதற்குப் பின்னர் அம்புலி காட்டல்போல்,
அரும்புச் சிறுவரின் அறிவுநிலை யறிந்து,
கண்கவர் காட்சிக் கவிதையை முதலிலும்,
முழுக்கதைப் பாடலை நூலின் முடிவிலும்
வைத்துள்ள போக்கு வரவேற்கத் தக்கது.
உள்ளபடி சொல்கிறேன் ஒவ்வொரு பாடலும்
கொள்ளுபடி ஆகுமே அன்றிக் கொஞ்சமும்
தள்ளுபடி ஆகாது சாரம் இருப்பதால் !
இலக்கியம் கற்றவர் இயற்றிய இந்நூல்
முழுநிலவு போன்றது, மொட்டுச் சிறுவரை
நல்லவ ராகவும் வல்லவ ராகவும்
ஆக்கத் தக்கநூல் ; அறியாமை இருளைப்
போக்கக் கூடிய புத்தக வெளிச்சம்.

வளரட்டும் இந்த வெளிச்சம்
வளரட்டும் இவர்புகழ் வரலாறு போலவே.

---

பூவண்ணன், எம். ஏ., அவர்கள் எழுதிய 'பாட்டுத் தோட்டம்' என்னும் குழந்தைப் பாடல்கள் தொகுப்பு நூலுக்கு 1970-இல் வழங்கிய அணிந்துரை.

# கட்டியக் கவிதை

சினத்திலன்றி அமைதியிலே வீரத்தின்
வரலாறு தெரிவ தில்லை ;
மனத்திலன்றி விழிகளிலே எண்ணங்கள்
மலர்வதில்லை ; மங்கை மாதர்
தனத்திலன்றிச் சந்தனத்தில் பால்சுரந்து
விடுவதில்லை ; சத்தில் லாத
நுனிப்பாட்டு நூல்கற்றோர் புத்தகத்தில்
புதுமைகளே நுழைவ தில்லை.

மின்னிடத்தில் ஒளியுண்டு ; சுனைநீரில்
தெளிவுண்டு ; மேன்மை மிக்க
பொன்னிடத்தில் பொலிவுண்டு ; பூவிடத்தில்
மணமுண்டு ; புதுமை வாணன்
தன்னிடத்தில் என்திறமை சரிபாதி
உண்டென்பேன். தமிழ்நூல் கற்றோர்
என்னிடத்தில் எதிர்பார்க்கும் செய்யுள்நயம்
இக்கவிஞர் இடத்து முண்டு.

புதுக்குழந்தை பிறந்தாலும், புதுக்கவிதை
பிறந்தாலும் பொருத்த மென்னும்
அதற்குரிய உறுப்புநலன் அத்தனையும்
நன்றாக அமைதல் வேண்டும்.
முதற்கவிதை நூல்வழங்கும் இக்கவிஞர்
அதற்குரிய முறையில் இங்கே
கதைக்கவிதை புனைந்துள்ளார் கடைசிவரை
முழுத்திறனைக் காட்டி யுள்ளார்.

பங்கிட்டுத் தேன்முத்தம் தரும்பெண்ணைப்
பற்றியிவர் பாடும் பாடல்,
செங்கரும்புக் கொக்கோகம் அல்லாமல்
வேறென்ன? தெளிந்த சொற்கள்
அங்கங்கே அரும்பாகி அந்திமுல்லைப்
பூவாகி அதனுள் செந்தேன்
பொங்குவதைக் காணுகின்றேன் கவிக்கட்டில்
வீணையெனும் புத்த கத்தில்.

தொகைதொகையாய்ப் பாட்டெழுதி இந்நாட்டில்
சிலரிங்கே தோற்கும் நாளில்
வகைவகையாய்ப் பாட்டெழுதி வெற்றிமிகப்
பெறும்புதுமை வாணன் நூலில்,
புகழ்சேர்க்கும் எண்ணங்கள் இருப்பதனைக்
கண்டுள்ளம் பூரிக் கின்றேன்.
முகம்சேர்க்கும் முத்தங்கள் கசக்குமெனச்
சொல்லுதற்கு முடியா தன்றோ?

---

கவிஞர் புதுமை வாணன் அவர்கள் எழுதிய 'கட்டில் வீணை' என்னும் கவிதை நூலுக்கு 1975-இல் வழங்கிய அணிந்துரை.

# சிரித்து மகிழுங்கள்

விழாதவர்கள் சிலருண்டு ; கொண்ட கொள்கை
விடாதவர்கள் சிலருண்டு ; விடிந்த பின்னும்
எழாதவர்கள் சிலருண்டு ; பசித்தோர்க் கன்னம்
இடாதவர்கள் சிலருண்டு ; கோயில் சென்று
தொழாதவர்கள் சிலருண்டு ; பருவப் பெண்ணைத்
தொடாதவர்கள் சிலருண்டு ; விம்மி விம்மி
அழாதவர்கள் இவ்வுலகில் யாரு மில்லை;
அகிலத்தில் சிரிக்காதார் எவரு மில்லை.

எரிப்பதற்கும் புதைப்பதற்கும் கார ணங்கள்
எத்தனையோ இங்குண்டு. நாமெல் லாரும்
சிரிப்பதற்கும் அழுவதற்கும் கார ணங்கள்.
சிலவுண்டு, சிலசமயம் பலவும் உண்டு.
நெருக்கடிகள் வரும்போதும், கொடிய துன்ப
நிகழ்ச்சிகளால் தாக்குற்றுக் கலங்கும் போதும்,
சிரிப்பதற்கு முயன்றாலும் முடிவ தில்லை.
சிலர்சிரிப்பில் வஞ்சகமே நுழைவ தில்லை.

முன்கோபக் காரனையும், அக்பர் என்னும்
மொகலாய மன்னனையும் பீர்பால் என்பான்
அன்ருடம் சிரிக்கவைத்தான். நாட்டு மக்கள்
அனைவரையும் நகைச்சுவையால் மகிழ வைத்தான்.
தென்னுலி ராமனென்பான் தனது பேச்சுத்
திறத்தாலே அனைவரையும் சிரிக்க வைத்தான்.
நன்ருக நாமெல்லாம் சிரிக்க வேண்டும்.
நம்மைவிட வெளிநாட்டார் சிரிக்கின் ருர்கள்.

அரிப்பூட்டும் கொக்கோகம் எழுதி ஞனே
அன்னவனுல், அவனெழுத்தால், நெஞ்சில் காம
நெருப்பூட்ட முடிந்ததன்றிச் சிரிக்க வைக்க
நிச்சயமாய் ஒருபோதும் முடிய வில்லை.
சிரிப்பூட்டிச் சிந்திக்க வைப்ப தற்குத்
திறன்வேண்டும், அத்திறமை பலருக் கில்லை.
சிரிப்பூட்டும் துணுக்குகளை எழுது தற்கும்
திறன்வேண்டும். அத்திறமை சிலர்க்கே உண்டு.

ஆனந்த விகடனிங்குத் தோன்று முன்பே
ஆயிரத்தெண் ணூற்றெண்பத் தைந்தில் தோன்றி
மானிடர்க்கு நகைச்சுவையை வழங்கி வந்த
மகாவிகட தூதனெனும் இதழைப் போன்று
தேனெழுகும் துணுக்குகளை வாரா வாரம்
சிறப்பாகத் தருதற்கோர் ஏடு வேண்டும்.
வானம்தான் இருக்கிறது; முகில்தான் இல்லை!
வான்கோழி இருக்கிறது; மயிலைக் காணேம்!

அகச்சுவைநூல் அதிகமுண்டு நமது நாட்டில்
ஆயினும்நம் நாட்டினிலே மிகுதி யாக
நகைச்சுவைநூல் தோன்றவில்லை ; மேலை நாட்டில்
நாள்தோறும் நகைச்சுவைநூல் தோன்றக் கண்டும்,
புகைச்சல்வரும் கீர்த்தனையும் , பிறருள் ளத்தைப்
புண்படுத்தும் கட்டுரையும் தீட்டு கின்றோம்.
சிகிச்சைசெய்யும் நகைச்சுவைநூல் தோன்று விட்டால்
தேசத்தில் அழுகுரலே அதிக மாகும்.

ஈசனையும் இறைவியையும் பற்றி முன்னோர்
எழுதிவைத்த பாடல்களைத் தொகுத்த ளித்தால்,
பூசனைக்கும் பூசாரிக் கூட்டத் துக்கும்
புராணிகர்க்கும் அந்நூற்கள் உதவு மன்றி
தேசத்தில் முன்னேற்றம் காண்ப தற்குச்
சிறிதுமுத வாதன்றோ? அதனால் , கல்வி
வாசனையும் யோசனையும் உடைய சீனி
வாசனொரு நகைச்சுவைநூல் வழங்கி யுள்ளார்.


புவிபுகழும் மெக்காலே என்பான் கையில்
புத்தகந்தான் எப்போதும் இருக்கு மென்பர்.
அவனைப்போல் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டே
ஆராய்ச்சி செயும்டாக்டர் சீனி வாசன் ,
சுவைமிகுந்த துணுக்குகளைத் தேர்ந்தெ டுத்துத்
தொகுத்துள்ளார் திறனாய்வும் இதில்சேர்த் துள்ளார்.
இவருடைய திறனாய்வும் இந்த நூலும்,
இந்நாட்டுக் கிப்போது மிகவும் தேவை.

இப்படியோர் புத்தகத்தை நமது நாட்டில்
எல்லாரும் தொகுத்திடலாம். தொகுத்த போதும்,
செப்பனிட்ட துணுக்குகளுக் கேற்ற வாறு
சிறப்பான தலைப்புகளைத் தருவ தற்கும் ;
அப்படியே தரினும்நகைச் சுவையைப் பற்றி
அரியதொரு திறனாய்வு செய்வ தற்கும் ;
கொப்புளிக்கும் தனித்திறமை வேண்டு மன்றோ ?
குருத்தோலை எழுத்தரிதற் கெங்கே போவர் ?

சிரித்துமகி ழுங்களெனும் இந்த நூலைத்
திறந்தாலே சிரிப்புவரும். இதைவா சித்தால்,
வருத்தமெலாம் பறந்தோடும். இலக்கி யத்தின்
வளர்ச்சிக்கும் கைகொடுக்கும். பக்கம் தோறும்,
அருத்தமுள்ள துணுக்குகளும், இளைஞர்க் கெல்லாம்
ஆசைதரும் துணுக்குகளும் நிறைந்த இந்நூல்,
மருத்துவர்க்கும் மருந்துதரும். நமது நாட்டு
மக்களிதை அவசியமாய்ப் படிக்க வேண்டும்.

---

பேராசிரியர் டாக்டர் ரா. சீனிவாசன், எம். ஏ., எம். லிட்., பிஎச். டி. அவர்கள் எழுதிய 'சிரித்து மகிழுங்கள்' என்னும் நூலுக்கு 1975-இல் வழங்கிய அணிந்துரை.



# சந்தனக் கிண்ணம்

நாடகங்கள் ,சிறுகதைகள், செய்தித் தாளில்
நல்லபல கட்டுரைகள் தீட்டி யுள்ள
ஓடைமொழிப் பேச்சாளர் உலக நாதன் ;
உண்மைக்கும் நன்மைக்கும் நடுவில் நின்று,
பாடுபடும் எழுத்தாளர் ஆவார். போற்றும்
பாவேந்தர் பரம்பரையைச் சேர்ந்தோர் ஆவார்.
ஆடுகடல் முத்தமிடும் மலேசி யாவில்
அன்றுடம் தமிழ்வளர்க்கும் கவிஞ ராவார்.

'மேதினியோர் பாராட்டும் 'உலக நீதி'
விளக்கத்தைத் தந்தானோர் உலக நாதன்.
காதலெனச் சுவையூட்டும் தமிழில், 'கன்றும்
கனியுதவும்' தந்தானோர் உலக நாதன்.
சாதிகளின் வேரறுக்கும் 'இருபு கீதை'
தமிழர்க்குத் தந்தானோர் உலக நாதன்.
ஆதிமொழி யாம்தமிழில் புதுநூல் ஒன்றை
அளித்துள்ளார் நமக்கிந்த உலக நாதன்.

விதைமுயற்சி மரமாகிப் பூத்துக் காய்த்து
விளங்குதல்போல் விளங்குவதே சிறந்த செய்யுள்.
மதிமுயற்சி உடையோரே இலக்கி யத்தில்
மறுமலர்ச்சி உண்டாக்கிக் காட்டக் கூடும்.
துதிமுயற்சிப் பாடலெனும் பக்திப் பாடல்
தொகைவளர்க்க விரும்பாத உலக நாதன்,
புதுமுயற்சி செய்திருக்கும் இந்த நூலில்,
புதுமைபல இருப்பதனுல் பூரிக் கின்றேன்.

எல்லார்க்கும் விளங்குகின்ற வண்ணம், பாடல்
எழுதுவது மிகக்கடினம். செய்யுள் செய்வோன்
சொல்சேர்க்கும் நுட்பத்தை அறியா விட்டால்
சுவைசேர்க்கும் வித்தையிலே தோற்றுப் போவான்.
நெல்சேர்க்கும் வயலைப்போல், குளிர்ச்சி கொண்ட
நிழல்சேர்க்கும் மரத்தைப்போல் ; வாயின் ஓரம்
புல்சேர்க்கும் மானைப்போல் புதுமை சேர்த்துப்
புகழ்பரப்பத் தெரிந்தவனே சிறந்தோன் ஆவான்.

"பழநிமலை உச்சியிலே இருப்பான் சைவ
பக்தர்தொழும் வேல்முருகன்" என்றும் ; "சேற்றுக்
கழனியிலே வேலைசெய்து கொண்டி ருப்பான்
கல்விநலம் காணுத முருகன்" என்றும் ;
"முழுஉரிமை பெற்ருக வேண்டும்" என்றும் ;
முன்னேற்றம் உழைக்காதார்க் கில்லை" என்றும் ;
"அழுதுவரும் ஏழைகளின் துயரம் தீர
அடிப்படையை நாம்திருத்த வேண்டும்" என்றும்;

''கொள்ளிவைக்கும் மனப்பான்மை கூடா'' தென்றும்
''குறுக்குவழி தீதெ''ன்றும்; இரவில், வெள்ளிப்
புள்ளிவைக்கும் வானத்தின் மீது தோன்றும்.
புதுநிலவை, ''அப்பளந்தான் நீயோ!'' என்றும்;
''வள்ளுவனை இவ்வுலகில் வாழ வைக்க
வந்தபித்தன் நானென்றும்'' பாடிக் காட்டி
அள்ளிவைத்துக் கொள்வோரை அதட்டு கின்றார்.
அறம்பொருளை இன்பத்தை வாழ்த்து கின்றார்.

சந்தனத்தை வைப்பதற்குக் கிண்ண முண்டு;
தயிரதனை வைப்பதற்குப் பானை யுண்டு;
வெந்தயத்தை வைப்பதற்குக் கலய முண்டு;
வெற்றியினை வைப்பதற்குத் திசைகள் உண்டு;
சிந்தனைச்சந் தனக்கிண்ணம் என்னும் இந்நூல்,
தேசத்தின் வளர்ச்சிக்கு வழிகள் காட்டிப்
பந்தயத்தில் வெற்றிபெறும்! எனவே இந்தப்
பாடலுக்கும் புகழுலகில் வரவேற் புண்டு!

---

கவிஞர் ஐ. உலகநாதன் அவர்கள் எழுதிய ''சந்தனக் கிண்ணம்'' என்னும் கவிதை நூலுக்கு 1966-இல் வழங்கிய அணிந்துரை.

# ஒற்றையடிப்பாதை

ஆணிப்பொன் போற்சிறந்து விளங்கி நின்ற
அமிர்தகவி ராயர்யார்? என்று கேட்டால்,
நாணிக்கண் புதைத்தலெனும் ஒருதுறைக்கே
நானூறு பாட்டெழுதிப் பிறரை வென்ற
மாணிக்கப் புலவரவர்; செய்த நன்றி
மறவாத புலவரவர். அவர்பேர் தன்னைத்
தூணுக்குத் தூணெழுதி வைக்கச் சொல்லும்
தோழர்களுள் ஒருதோழர் சோதி வாணன்.

வான்மதிக்கும் செங்கதிரைப் போன்று, தோகை
மயில்மதிக்கும் மேகத்தைப் போன்று, நாட்டில்
நான்மதிக்கும் கவிஞர்களுள் ஒருவ ரான
நற்கவிஞர் சொற்கவிஞர் சோதி வாணன்,
ஊன்மதிக்கும் உயிர்போன்று சிறந்த தான
ஒற்றையடிப் பாதையெனும் கவிதை நூலைத்
தேன்மதிக்கும் செந்தமிழில் தீட்டி யுள்ளார்;
தீட்டியதில் புதுமைபல காட்டி யுள்ளார்.



2767—3

நதிவழியில் ஓடங்கள் போதல் போலும்,
நல்வழியில் நடந்துசெல்வோர் போலும், செய்யுள்
விதிவகையில் பாடல்பல எழுதி, நல்ல
வெற்றிக்கு வழிதேடி யுள்ளார். மேலும்
புதுவகையில் பாடல்பல தீட்டிக் காட்டிப்
புகழ்சேர்க்க முயன்றுள்ளார். தொண்டை தன்னில்
சதைவளர்ந்தால் என்னாகும்? குடத்தி லுள்ள
தண்ணீரில் எண்ணெய்யேன் கலக்க வேண்டும்?

நீதிநெறி விளக்கமெனும் பழைய நூலில்
நீதிகளே அதிகமுண்டு. சோதி வாணன்
சாதனைக்கோர் அடையாள மாக நிற்கும்
சத்தான இந்நூலில், இந்நூற் றாண்டின்
காதல்நெறி விளக்கங்கள் அதிக முண்டு!
கட்டிலுக்கும் தொட்டிலுக்கும் பாட லுண்டு.
நூதனங்கள் இக்கவிதை நூலி லுண்டு.
நுணுக்கமுள்ள பாடல்பல இதிலே உண்டு.

இச்சைதரும் இளம்பருவக் காதல் வாழ்க்கை
இனிப்பதுபோல் இனிக்குமிந்தக் கவிதை நூலில்,
பச்சரிசிச் சிந்தனையோ, கசப்பு மிக்க
பாகற்காய்ச் சிந்தனையோ சிறிது மில்லை.
மெச்சுகின்றேன் மெச்சுகின்றேன் நூலி லுள்ள
மின்னலெனும் கவியைமிக மெச்சு கின்றேன்.
நிச்சயமாய் இந்நூலின் மூல மாக
நீண்டபுகழ் பெறட்டுமென வாழ்த்து கின்றேன்.

---

பேராசிரியர் இரா. சோதிவாணன், எம். ஏ., பி. எல்., அவர்கள் எழுதிய 'ஒற்றையடிப் பாதை' என்னும் கவிதை நூலுக்கு 1976-இல் வழங்கிய அணிந்துரை.

# புன்னகை

வங்கியில் வேலை பார்க்கும்
    வாலிபக் கவிகா ருண்யன்
அங்கொரு காட்டில் வாழும்
    யானையின் சிறுகண் போலும் ;
சிங்கத்தின் சிறுபல் போலும் ;
    சிறயதோர் படகு போலும் ;
இங்கொரு நூல்யாத் துள்ளார்.
    இவர்க்கிது முதல்நூ லாகும்.

தன்மகள் ஒருத்தி பேரைத்
    தாங்கிய தர்க்க நூலாம்
'அன்ன பட்டீயம்' தன்னை
    அன்றொரு புலவன் செய்தான்.
புன்னகை இவரின் சொந்தப்
    புதல்வியின் பெயராம். அந்தப்
'புன்னகை'ப் பெயரை இந்தப்
    புதுநூலுக் கிவரிட் டுள்ளார்.

ஏழைபால் இரக்க முள்ள
இக்கவி, நமது நாட்டில்
வாழவே வழியில் லாமல்
வாடுவோர் தம்மைப் பற்றி
ஆழமாய்ப் பாடி யுள்ளார்!
அரசியல் நடத்து கின்ற
தாழங்காய்த் தலைவர் தம்மைச்
சரியாகச் சாடி யுள்ளார்.

'அன்றைய திரைப்ப டத்தில்
அறிவியல் வளர்ச்சி யில்லை'
என்றுநம் பாவின் வேந்தர்
எழுதினர். அவ்வா றிங்கே,
இன்றைய திரைப்ப டத்தில்
இடம்பெறும் ஆபா சத்தைக்
கண்டித்துப் பாடி யுள்ள
கவிஞரை வரவேற் கின்றேன்.

கதைபொதி பாடல் செய்த
கம்பரும், சேக்கி ழாரும்
முதியவர். இவரோ, செய்யுள்
முத்திரை உலகத் துக்குப்
புதியவர். இந்நூற் பாக்கள்
புதியவார்ப் படங்கள்! ஓடும்
நதியினல் நன்மை யுண்டு
நமக்கிந்நூல் நன்மை செய்யும்.

---

கவிஞர் சேயாறு காருண்யன் அவர்கள் எழுதிய 'புன்னகை' என்னும் கவிதை நூலுக்கு 1979-இல் வழங்கிய அணிந்துரை.

# நயனங்கள்

சயனங்கள் பலவற்றுள், இன்பக் காதல்
சயனந்தான் மிகச்சிறந்த சயன மாகும்.
பயணங்கள் பலவற்றுள், உலகைச் சுற்றும்
பயணந்தான் மிகச்சிறந்த பயண மாகும்.
அயனங்கள் பலவற்றுள், தெற்கே செல்லும்
அயனந்தான் மிகச்சிறந்த அயன மாகும்.
நயனங்கள் பலவற்றுள், கல்வி என்னும்
நயனந்தான் மிகச்சிறந்த நயன மாகும்.

மலைசூழ்ந்த நாட்டில்வாழ் அன்பா னந்தன்
வடித்துள்ள 'நயனங்கள்' என்னும் நூலைப்
பலமுறைநான் இன்றிரவு படித்தேன். ஒவ்வோர்
பாட்டும்தேன். அத்தேனைக் குடித்தேன். நூலில்,
தலைவர்க்கு முதலிடத்தைத் தராமல், இன்பத்
தமிழுக்கே முதலிடத்தைத் தந்தி ருக்கும்
அலைமரபுக் கவிஞரிவர். இவரிந் நூலில்
அரியபல சிந்தனைகள் வழங்கி யுள்ளார்.


இலுப்பைமரம் கோடைவரும் நாளில் பூத்தால்,
இலவமரம் அப்போது பூப்ப தில்லை.
அலுப்புவரும் நேரத்தில் உறக்கம் வந்தால்,
ஆசையெழும் போதுறக்கம் வருவ தில்லை.
மலைப்பகுதி நாட்டில்வாழ் அன்பா னந்தன்
வடித்திருக்கும் நயனங்கள் எனுமிந் நூலின்
தலைப்புகளைப் படித்தாலே வீரம் பொங்கும்
தன்மானப் பேருணர்ச்சி உளத்தில் தங்கும்.

வாகையொன்றும், வஞ்சிமர மொன்றும் சேர்ந்து
வனத்தினிலே வளர்ந்துவரக் காணு கின்றோம்.
காகமொன்றும் புறவொன்றும் கூடி வாழக்
காணுகின்றோம் நாமிதனைக் கண்டி ருந்தும்,
தாகமென்றும் வேர்வையென்றும் வெவ்வே றாகத்
தனித்திருப்ப தேனென்று கவிஞர் கேட்கும்
நாகரிகப் புதுக்கேள்வி நல்ல கேள்வி
நம்நாட்டின் மறுமலர்ச்சிக் கேற்ற கேள்வி!

அரும்பாகிப் போதாகி மலரு மாகி
அம்மலரே அதற்குப்பின் பூவு மாகும்.
பெரும்பாலோர் மலராகிப் பூப்ப தில்லை.
பெருங்கவிஞன் பூவாகா திருப்ப தில்லை.
விருந்தமிழ்தும் என்றாலும், தமிழை யன்றி
வேறெதையும் விரும்பாத அன்பா னந்தன்.
வருங்காலப் பெருங்கவிஞர் என்று ரைப்பேன்
வளர்புகழுக் கிந்நூலே சாட்சி என்பேன்.

---

கவிஞர் சா. ஆ. அன்பானந்தன் அவர்கள் எழுதிய 'நயனங்கள்' என்னும் கவிதை நூலுக்கு 1979-இல் வழங்கிய அணிந்துரை.




கருப்பந்தான் உயிரினத்தின் மூல முட்டை;
கற்பனையின் பிரசவந்தான் கதையும் பாட்டும்;
நிருப்பந்தம் என்கின்ற கட்டா யத்தால்
நிகழ்வதுதான் வைதீகச் சடங்கு; நேயர்
விருப்பந்தான் இலக்கியத்தின் எடைக்கல்; காலை
வெளிச்சத்தின் வேற்றுமைதான் இரவு நேரம்;
திருப்பந்தான் புதுக்கவிதை; இதுவோ, முன்னோர்
செய்யுள்வழி போகாத பாட்டுப் பாதை.

வெண்பாக்கள், விருத்தங்கள், அகவற் பாக்கள்,
வேறுபல சந்தங்கள் மூல மாகக்
கண்ணாடிக் கவிராய ரெல்லாம் கூழாங்
கல்லைப்போல் கவியெழுதி வந்த நாளில்,
பண்பட்ட எழுத்தாள ரான சென்னைப்
'பரமேசு வரன்பிள்ளை' என்னும் மேதை,
எண்பத்தோ ராண்டுகட்கு முன்ன மேயே
இந்நாட்டில் புதுக்கவிதை எழுத லானார்.

எதுக்களிக்கும் வெண்பாக்கள், அகவற் பாக்கள்
எழுதாமல், முதன்முதலில் தமிழ கத்தில்,
புதுக்கவிதை எழுதியவர் அவரே யன்றிப்
பூணுலார் முதன்முதலில் எழுத வில்லை.
நதிக்கரையில் வாழ்ந்தவர்கள் எழுதா முன்பே
நம்மவர்தாம் இதற்குவழி காட்ட லானார்.
அதற்குப்பின் 'பவுலெ'ன்னும் யேசு பக்தர்
அவர்வழியைப் பின்பற்றி எழுதி வந்தார்.

இன்றுபலர் புதுக்கவிதை எழுது கின்றார்
எழுதுகின்ற கவிஞர்களுள் அப்துல் ரஹ்மான்,
முன்நிற்கும் மோனையைப்போல் முன்நிற் கின்றார்.
முன்னேறி முன்னேறி வளர்ந்து தம்மைப்
பின்பற்றும் படிசெய்து வருவ தோடு
பெரும்புகழுக் குரியவராய் விளங்கு கின்றார்.
மன்றத்தில் இவரைப்போல் புதுமை யாக
மற்றவர்கள் பாடுதற்கே முடிய வில்லை!

மந்திரமும் தந்திரமும் புதிதா? சித்த
மருத்துவத்தின் முறைநமக்குப் புதிதா? ராஜ
தந்திரந்தான் நம்நாட்டிற் புதிதா? கட்சித்
தலைவர்களின் போராட்டம் புதிதா? ஆண்பெண்
சந்திக்கும் முறைபுதிதா? இல்லை; இல்லை!
தமிழகத்துக் கவிஞர்களுள் அப்துல் ரஹ்மான்
சிந்திக்கும் முறைபுதிது? ஒன்றைப் பற்றித்
திறனும் இவர்முறையோ புதிய தாகும்.

நால்வீதி வருணனைநூல் ஒன்றை, நீண்ட
நாள்வாழ்ந்த சூரியக்கண் புலவர் தந்தார்.
பால்வீதி நூலொன்றை ரகுமான் தந்தார்.
படுக்கையறைக் கொக்கோக மென்னும் காமத்
தோல்வீதி நூல்தந்தான் வீர ராமன்.
சோணாட்டுச் செயங்கொண்டான் பரணி யென்னும்
வேல்வீதி நூல்தந்தான். இவரோ, நேயர்
விருப்பமெனும் மற்றொருநூல் வழங்கி யுள்ளார்.

எண்ணியெண்ணிப் புதுமைபல பின்னிப் பின்னி,
இக்கவிஞர் படைத்திருக்கும் நூலில் உள்ள
மண்ணென்னும் முதற்கவிதை, உலகம் போற்றும்
மகாகவிகள் பாராட்டும் கவிதை யாகும்.
கண்ணென்னும் உறுப்பைப்போல் சிறந்து நிற்கும்
கவிஞரிவர் போலிவரே எழுதக் கூடும்.
பெண்ணொருத்தி பிள்ளைபெறல் போலே ஆண்கள்
பிள்ளைபெற முயன்றாலும் முடிவ துண்டோ?

வார்த்தைகளைத் தேனுக்கும் ரகுமான், ''தண்ணீர்
வாக்கியந்தான் ஆறெ''ன்று கூறு கின்றார்.
தீர்த்தகிரிப் புலவர்களும் பிறரும், ஆற்றைத்
தினந்தோறும் பார்க்கின்றார். பார்த்து மென்ன?
வேர்க்கடலைக் கவிஞர்களா இவரைப் போன்று
விவேகத்தோ டிவ்வாறு கூறக் கூடும்?
பார்ப்பதற்கும் படிப்பதற்கும் கண்கள் போதும்.
பாட்டெழுதக் கற்பனைக்கண் வேண்டு மன்றோ?

கண்டனேயால் உருவான காத லென்று
கம்பர்மகன் இளவரசி யிடத்தில் சொன்னன்.
வெண்டளையால் உருவான வெண்பா என்று
வேதகிரி யெனும்புலவர் வகுப்பில் சொன்னர்
துண்டலேயால் உருவாகும் நதியின் ஓசை
தூங்காத நகரிலுள்ள தாஜ்ம காலைப்
"பெண்டளையாய் உருவான வெண்பா" என்று
பெருங்கவிஞர் நம்ரகுமான் கூறு கின்ருர்.

தாய்ப்பாலே பருகாமல் வளர்ந்த புத்தர்
தலைமுடிபோல் அலைமுடிகள் நரைத்து, நன்கு
மூப்படைந்து கத்துகின்ற கடலும், ஈர
மூச்சுவிடும் ஆறுகளும், ஏரி நீரும்,
பூப்படைய முடியாத புனலாம்! பூக்கள்
பூத்துமலர்ந் திருக்கின்ற குளமே, நன்கு
பூப்படைந்து, சம்போகச் சந்தும் பந்தும்
பூரித்து விளங்குகின்ற மங்கை போலாம்!

ஒடிந்துவிடும் சிந்தனையோ, விஞ்ஞா னத்தை
ஒதுக்குகின்ற பழமைகளோ, சமுதா யத்தில்
படிந்திருக்கும் தீமைகளை வெள்ளைத் தாளில்
பதிவுசெய்யும் பாடல்களோ நூலி லில்லை.
உடனடியாய் இந்நூலை ஆங்கி லத்தில்
ஒழுங்காக மொழிபெயர்த்தால் ரகுமான் கீர்த்தி
கிடுகிடென மேனுட்டில் பரவும்! அந்தக்
கீர்த்தியினைப் பெறும்தகுதி இவருக் குண்டு.

படைகாக்கும் தமிழ்வீரம் வேண்டு மாயின்
பரணிதனைப் படியுங்கள்; சிறந்த செய்யுள்
நடைகாக்கும் அமைப்புமுறை வேண்டு மாயின்,
நைடதத்தைப் படியுங்கள்; வினாவுக் கேற்ற
விடைகாக்கும் பேரறிவு வேண்டு மாயின்,
வேதாந்தம் படியுங்கள்; புதுமை தன்னை
அடைகாக்கும் சிந்தனைகள் வேண்டு மாயின்,
அப்துல்ரஹ் மான்நூலாம் இந்நூல் போதும்.

---

கவிஞர் அப்துல் ரகுமான் அவர்கள் எழுதிய 'நேயர் விருப்பம்' என்னும் நூலுக்கு 1977 -இல் வழங்கிய அணிந்துரை.

# உலகே உனக்காக

'பரிப்பெருமாள், ஆளவந்தார், பகழிக் கூத்தர்,
பரத்தைவயல் கவிராயன் முத்துக் குட்டி,
பெருங்கருணை முத்தழகர் மற்றும் பல்லோர்
பிறந்தவட்டம் முகவைமா வட்ட மாகும்.
விருந்தமிழ்தம் தந்திடினும் தமிழை யன்றி
வேறெதையும் யான்வேண்டேன் என்று கூறும்
பெருங்கவிஞர் கசேந்திரனும் முகவை மண்ணில்
பிறந்தவர்தாம். இஃதிவர்க்கோர் பெருமை யன்றோ !

இத்தகைய பெருங்கவிஞர் இயற்றி யுள்ள
இவ்-வுலகே உனக்காக என்னும் நூலைப்
பத்துமுறை நான்படித்து மகிழ்ந்தேன். மற்றோர்
பாவலரும் இதைப்படித்து மகிழ்ச்சி யுற்றார்.
நித்திரையில் கனவுவரும்; இந்த நூலை
நினைத்தாலே கவிதைவரும்! குயில்கள் கூவும்
சித்திரையில் கோடைவரும்; இந்த நூலைத்
திறந்தாலே ஓடைவரும்! வெப்பம் தீரும்!

சிறப்புமிகு நரிவிருத்தம் என்னும் நூலே
திருத்தக்க தேவரது முதல்நூ லாகும்.
நறுக்குதற்கோர் ஆயுதமாம் இந்த நூலே
நரிப்பையூர் கசேந்திரனின் முதல்நூ லாகும்.
சிறைப்படுத்தும் சாதிமத பேதம் ; மற்றும்
தீண்டாமை இவற்றையெல்லாம் பெரியார் போன்று
குறிப்பெடுத்துக் கண்டிக்கும் இந்நூல், மற்றோர்
குமரேச சதகத்தைப் போன்ற தாகும்.

''தெருவெல்லாம் சாமியுண்டு சின்ன பாப்பா
திரும்பியும்நீ பார்க்காதே சின்ன பாப்பா
அருவருப்பாய் அவையிருக்கும் சின்ன பாப்பா
அலட்சியம்நீ செய்திடடி சின்ன பாப்பா
பெரியாரின் கொள்கையினை சின்ன பாப்பா
பின்பற்றி நீநடப்பாய் பாப்பா'' என்று
சரியான சீர்திருத்தப் பாடல் ஒன்றைச்
சமுதாய நலங்கருதிப் பாடி யுள்ளார்.

தொண்டுசெய்து வருவோர்க்கும் ; உழவு செய்யும்
தோழர்கட்கும் இடந்தருதற் கிசைந்தி டாமல்,
உண்டுகளித் திருப்போர்க்கும் ; ஒவ்வோர் நாளும்
ஊர்க்கொள்ளை யடிப்போர்க்கும் ; தீமை செய்யும்
குண்டர்கட்கும் ; ஆங்காங்கே கோயில் கட்டும்
குழுவினர்க்கும் இடமளித்த நிலத்தைப் பார்த்து,
மண்டிணிந்த நிலமேயென் றழைத்தி டாமல்
மடநிலமே ! என்றழைத்துச் சாடு கின்றார்.


"மதிப்பார்கள் என்றெண்ணிக் குடிக்கின் றாயே ;
மரணம்வரும் எனத்தெரிந்தும் குடிக்கின் றாயே ;
எதைத்தொட்டால் உனைச்சுடுமோ, அதனை நீபோய்
எதற்காகத் தொடுகின்றாய் ? இதைக்கேள் தம்பி !
இதைவிட்டால் உனக்கன்றோ நன்மை என்றேன் ;
ஏனிதனை விடவில்லை ? மதுவைப் பற்றித்
துதிப்பாடல் பாடாதே ! பாபர் மன்னன்
தூக்கியெறிந் திடவிலையோ மதுக்கிண் ணத்தை !"

என்றொருவன் பாடியுள்ளான். குடிக்கா தீர்கள்
என்றிவரும் கண்டித்துப் பாடி யுள்ளார்.
நின்றுபயன் தரத்தக்க இந்த நூலின்
நீள்கவிதைப் பகுதியிலே இடம்பெற் றுள்ள
பொன்விருத்தப் பாக்களெனும் புகழ்ச்சிப் பாக்கள்,
புகழ்வளர்க்க வழிவகுத்துக் கொடுக்கும் பாக்கள் !
முன்புறத்தில் அமர்ந்திருக்கும் கதம்பப் பாக்கள்,
முத்தமிழின் முகம்பார்க்கும் முல்லைப் பூக்கள் !

ஏட்டுப்பற் றுடையவர்கள் திரு.வி. க.வின்
ஏடுகளால் பெரும்பயனைப் பெறுதல் போலப்
பாட்டுப்பற் றுடையவர்கள் இந்த நூலைப்
படித்திட்டால் மிக்கபயன் பெறலாம். மேலும்,
நாட்டுப்பற் றுடையோர்க்கும் ; சமுதா யத்தின்
நலன்கருதிப் பாடுபடும் தோழர் கட்கும் ;
வீட்டுப்பற் றுடையோர்க்கும் ; ஏனை யோர்க்கும்
மிக்கபயன் தரத்தக்க நன்னூல் இந்நூல் !

---

கவிஞர் நரிப்பையூர் கசேந்திரன் அவர்கள் எழுதிய 'உலகே உனக்காக' என்னும் கவிதை நூலுக்கு 1981-இல் வழங்கிய அணிந்துரை.



# பொழுது புலர்ந்தது

"என்னருகில் எப்போதும் புத்த கங்கள்
இருப்பதொடு நண்பர்களும் இருப்ப துண்டு.
பொன்னதனைக் கேட்டாலும் தருவே னன்றிப்
புத்தகத்தை நானிரவல் தரவே மாட்டேன்.
கன்னியரைப் புத்தகத்தை இரவல் தந்தால்
கசங்காமல் வீடுவந்து சேர்வ தில்லை;
என்பதனால் தருவதில்லை. யார்நூ லாக
இருப்பினும்நான் அதைப்படிக்கா திருப்ப தில்லை.

பொழுது(நன்கு) புலர்ந்ததெனும் நூலை, அந்திப்
பொழுதில்நான் வாசித்தேன். இந்த நூலை
எழுதியவர் என்நண்பர் பட்டுக் கோட்டை
இராசேந்திரன் எனும்கவிஞர்; பாவின் வேந்தர்
குழுவினிலே இடம்பெற்ற கவிஞர். மூடக்
கொள்கையினைக் கண்டிக்கும் எங்கள் கூட்டம்,
முழுநிலவின் அருகிலுள்ள விண்மீன் கூட்டம்.
மூத்தவன்நான். இவரிளைஞர். கெட்டிக் காரர்.

நாடுபுகழ் திருத்தக்க தேவ ருக்கு
நரிவிருத்தம் எனும்நூலே முதல்நூ லாகும்.
ஆடகப்பொன் போன்றவராம் கவிம ணிக்கோ
அழகம்மை விருத்தம்தான் முதல்நூ லாகும்.
மூடுபனிப் பகைவர்தமை எழுத்தால் பேச்சால்
முறியடிக்கும் இவர்க்கிதுவே முதல்நூ லாகும்.
காடுபடும் பொருளைப்போல் சிறப்பு மிக்க
கவிதைபல படைத்துள்ளார் இவரிந் நூலில்.

சிலம்புதந்த பெருங்கவிக்கோ சேரன் தம்பி
திங்களைத்தான் முதல்முதலில் வாழ்த்தி யுள்ளார்.
புலம்புகின்ற சமுதாய மக்கட் கெல்லாம்
புத்திசொல்லும் இக்கவியோ, வையத் துக்கே
தலைவிளக்காய் விளங்கும்செங் கதிரை, இன்பத்
தமிழ்க்கவியால் முதன்முதலில் வாழ்த்து கின்றார்.
கலையுலகப் பெண்ணொருத்தி இந்த நூலின்
காகிதத்து மேடையிலே ஆடு கின்றாள்.

விதைமுயற்சிக் கவிதைகளை இந்த நூலில்
விதைத்துள்ளார். பகுத்தறிவைப் பரப்பி யுள்ளார்.
சதைமுயற்சிக் கவிதைகளை இளைஞர் கட்குத்
தந்துள்ளார். போர்ப்பரணி பாடி யுள்ளார்.
கதைமுயற்சிக் கவிதைகளின் மூல மாகக்
கற்பனையை அற்புதமாய்க் காட்டி யுள்ளார்.
புதுமுயற்சிக் கவிதைபல படைத்துக் காட்டிப்
புகழுக்கோர் பாத்திரமாய் விளங்கு கின்றார்.

---

கவிஞர் பட்டுக்கோட்டை இராசேந்திரன் அவர்கள் எழுதிய 'பொழுது புலர்ந்தது' என்னும் கவிதை நூலுக்கு 1981-இல் வழங்கிய அணிந்துரை.

# மனத்தூறல்

மற்றுமொரு கம்பரெனப் புகழப் பெற்ற
    மகாவித்வான் மீனுட்சி சுந்த்ரம் பிள்ளை
நெற்கதிர்கள் அசைந்தாடக் காணும் போதும்,
    நீரூற்றைக் காணுகின்ற போதும், செய்யுள்
அற்புதமாய்ப் படைப்பாராம்! பாடு வாராம்!
    அன்னவர்போல் இராயபுரம் கணேசன் என்பார்
வற்ருத கருங்கடலைப் பார்க்கும் போதும்
    வான்மதியைப் பார்க்கையிலும் பாடு வாராம்.

பழத்துக்குள் விதையைப்போல், வெளிவ ராமல்
    பதுங்கிக்கொண் டிருந்தஇவர் பாக்கள், இன்ருே
கழுத்தளவுத் தண்ணீரில் அழகாய்ப் பூத்துக்
    காட்சிதரும் தாமரைபோல், இந்த நூலில்
முழுக்குடும்பம் நடத்துவதைப் பார்க்கின் றேன்நான்.
    முதற்கவிதை காற்றென்னும் கவிதை யாகும்.
மழைக்கவிதை ஓரிடத்தில்; விட்டில் பூச்சி
    வர்ணனையோ தொண்ணூற்று மூன்ரும் பக்கம்.



2767—4

“காற்றுக்குத் தடையில்லை; மற்றோர் நாடு
கடப்பதற்கு விசாதேவை இல்லை” என்றும்,
“மாற்றானின் மனைவிதீண்ட இன்பம் துய்க்க
மறுப்பில்லை” அதற்கென்றும், “கன்னிப் பெண்ணின்
மேற்போட்டு மறைத்திருக்கும் மேலா டைக்குள்
மெதுவாக நுழைந்ததனை விலக்கிப் பார்க்கும்
ஆற்றலதற்” குண்டென்றும், காற்றைப் பற்றி
அற்புதமாய் இக்கவிஞர் பாடி யுள்ளார்.

முயற்சியினால் குளத்தைஉரு வாக்கக் கூடும்;
முடிநரைத்த கருங்கடலைத் தோண்டு தற்கு
முயன்றால்நாம் நிச்சயமாய்த் தோற்றுப் போவோம்!
மூத்தகடல் இயற்கைசெய்த பள்ள மன்றோ?
பயிற்சியினால் கவியெழுதும் கணேசன், உப்புப்
பாத்திரமாம் கருங்கடலை உற்று நோக்கி
வியப்படைந்து, கடிகைமுத்துப் புலவர் போல
விரிந்தகடல் விலாசமொன்று பாடி யுள்ளார்.

தோகைமயில் என்போம்நாம், இவரோ, வண்ணத்
‘தோகைவள்ளல்’ என்கின்றார் மயிலைப் பார்த்து.
நாகரிகக் கலைக்கூடம் வான மென்று
நன்றாகச் சிந்தித்துப் பாடி யுள்ளார்.
மேகத்தின் நீர்க்கோடே மழையாம்; தண்ணீர்
மெத்தைகளே ஆறுகளாம்; உலக மக்கள்
தாகத்துக் குதவாத கடலே, உன்னால்
சவமானோர் எத்தனைப்பேர் எனக்கேட் கின்றார்!

கவிதைக்குள் சிறுகதையை அடக்க வல்ல
கவிஞர்களுள் மிகச்சிறந்தோன் கம்ப தாசன்.
அவனைப்போல் நாமெழுத வேண்டு மென்னும்
ஆர்வத்தில் கவிதையொன் றியற்றி யுள்ளார்
சுவைக்கின்ருள் இளம்மனைவி சிறிது காலம்.
துணைவனவன் மாண்டவுடன் விதவை யாகித்
தவிக்கின்ருள். அன்னவளின் கண்ணீர் வாழ்வைத்
தம்முடைய கண்ணீரால் எழுதி யுள்ளார்.

தேரோட்டும் தமிழ்நாட்டில், நம்மை எல்லாம்
திருத்தியவர் வெண்தாடி வேந்தர் என்னும்
ஈரோட்டுப் பெரியார்தாம்! பாவின் வேந்தர்
இல்லையென்ருல், அறிஞரண்ணு இல்லை என்ருல்
வேரோடு சாய்கின்ற மரத்தைப் போல்நாம்
வீழ்ந்திருப்போம் எனக்கூறும் கணேசன், நாடு
பாராட்டும் பலர்பற்றி எழுதி யுள்ளார்.
பாடல்களுள் புதுமுறையைக் கையாண் டுள்ளார்.

பாட்டுறவு கொண்டிருக்கும் இந்த நூலில்
பகுத்தறிவுக் கருத்துக்குப் பஞ்ச மில்லை!
நாட்டுறவுக் கவிதைகளும், சந்தச் சிந்து
நடைபயிலும் கவிதைகளும், புரட்சிப் பாட்டும்
கூட்டுறவுக் கவிதைகளும் படிப்போர் நெஞ்சைக்
கொள்ளைகொள்ளும். மேலுமிந்த நூலி லுள்ள
வீட்டுறவுப் பாடல்களைப் படித்தால், காதல்
விவகாரம் அப்போதே கொப்பு ளிக்கும்.

கண்ணென்னும் மிகச்சிறந்த உறுப்பைப் பற்றிக்
கவிஞரிவர் புனைந்திருக்கும் கவிதை, என்றன்
எண்ணத்தின் உள்ளிறங்கி விட்ட தாலே
இனிஎன்வாய் அதைப்பாடிக் கொண்டி ருக்கும் !
கண்ணீரென் னுங்கவிதை ஆதி மந்தி
கண்ணீரை நினைவூட்டும், இந்நூல் தன்னில்
பண்பட்ட இசைப்பாக்கள் ஏழெட் டுண்டு.
படவுலகம் வரவேற்றால் நன்மை யுண்டு.

மன்னாத நாயகரின் மைந்தர் யாத்த
மனத்தூறல் மிகச்சிறந்த கவிதைத் தூறல்.
தென்னாட்டு வள்ளல்களுள் ஒருவ னான
செட்டிமகன் பந்தனென்பான் அவ்வைக் கீந்த
பொன்னுடை போற்சிறந்த நன்னூல் இந்நூல் ;
புதுக்கருத்துக் கருவூலம் ; எண்ணக் கோலம் !
முன்னோட்டம் இந்நூலின் கவிதை ஓட்டம்.
முதல்நூலாம் இவர்க்கிந்நூல் புகழைக் கூட்டும்.

---

கவிஞர் ம. ஏ. கணேசன் அவர்கள் எழுதிய 'மனத்தூறல்' என்னும் கவிதை நூலுக்கு 1982-இல் வழங்கிய அணிந்துரை

# நிலா முற்றம்

நெல்முற்றம் என்பதெது ? வயல்தான் ; உப்பு
நீர்முற்றம் என்பதெது ? கடல்தான் ; ஆய்ந்தோர்
சொல்முற்றம் என்பதெது ? நிகண்டு நூல்தான்.
தூங்காத வெள்ளைநிலா எட்டிப் பார்க்கும்
நல்முற்றம் நிலாமுற்றம் என்றால், வேலூர்
நாராய ணன்படைப்பாம் இந்த முற்றம்
எல்லார்க்கும் பயனளிக்கும் பாட்டு முற்றம்
இவர்கவிதை நிலாமுற்றம் எழுத்து முற்றம்.

மலராய்ந்து பூத்தொடுத்தல் போன்று வார்த்தை
மலராய்ந்து பாமாலை தொடுக்க வல்ல
தலைசிறந்த இக்கவிஞர் எழுபத் தாறு
தலைப்புகளில் நிலாமுற்றம் என்னும் நூலைப்
பலர்புகழ்ந்து பாராட்டத் தக்க வாறு
படைத்துள்ளார் ; மானுடத்தைப் பாடி யுள்ளார்
கலைஞர்களை அறிஞர்களைப் பற்றி யெல்லாம்
கறுப்புச்சூ ரியக்கவிஞர் பாடி யுள்ளார்

கட்டோடே கனத்தோடே வாழ்வார் தம்மைக்
கண்ணோடே கருத்தோடே இருப்பார் தம்மைப்
பட்டோடே பணியோடே திரிவார் தம்மைப்
பாராட்டும் இந்நாளில் இவரோ, தங்கத்
தட்டோடே தனத்தோடே வாழ்ந்தி டாமல்
தமிழோடு வாழ்பவர்கள் தம்மைப் பற்றி,
'எட்டாத மேல்நிலையில் இருக்கும் சான்றோர்
இவர்களன்றோ' எனவியந்து பாடி யுள்ளார்!

ஆங்காங்கே குழந்தைகளை எட்டிப் பார்க்கும்
அரும்புமொட்டுக் கவிதைகளும் ; சமுதா யத்தில்
தேங்கியுள்ள தீமைகளைக் கண்டிக் கின்ற
சீர்திருத்தக் கவிதைகளும் ; புகுத்தப் பெற்ற
சாங்கியத்தைச் சடங்குகளைத் தண்டிக் கின்ற
சாட்டையடிக் கவிதைகளும் இடம்பெற் றுள்ள
மூங்கில்முத்துப் புத்தகத்தில் புதுமை என்னும்
முத்திரையைப் பதித்துள்ளார் என்றன் நண்பர்.

இந்தநாள் அந்தநாளென் றெழுது வோம்நாம்
'இழைத்தநாள்' என்றொருவன் எழுத லானான்.
பொந்துமரச் சோலைதனில் உலவும் வண்டைப்
'பூநக்கி' என்றொருவன் எழுத லானான்.
பந்தயப்பாட் டரங்கத்தில் வெற்றி பெற்ற
பாவலராம் நாவலராம் இவரோ, காமச்
சந்துவழி யாய்ப்பிறக்கும் குழந்தை தன்னைச்
'சதைக்கல்வெட்' டென்கின்றார் புதுமை யாக.

"பகலுக்கே விடைகொடுப்போம்! வயது வந்த
பால்நிலவைத் துணைக்கழைப்போம்! ஆங்கி ருக்கும்
அகல்விளக்கின் ஒளிமழையில் நனைந்து கொண்டே
அனைத்துசுகம் நாம்பெறுவோம்" என்னும் பாடல்,
முகத்தோடு முகம்சேர்த்து முத்த மிட்டு
முத்தமிடும் போதில்புருச் சத்த மிட்டுச்
சுகத்தோடு சுகம்சேர்க்க விரும்பு வோர்க்குத்
தூண்டுகோல் போலமைந்த பாட லாகும்.

ஐப்பசியும் கார்த்திகையும் கூதிர்க் காலம்.
அக்காலம் வந்துற்ருல், முகில்கள் என்னும்
தெப்பங்கள் வானத்தில் மிதக்கும்; தண்ணீர்
தெளிவடையும்; அத்தகைய தெளிந்த நீர்போல்
எப்பொழுதும் மிகத்தெளிந்த நடையில் பாக்கள்
இயற்றுமிவர் இதனையும்நன் கியற்றி யுள்ளார்.
பொய்ப்புழுக்கம் சிலநூலில் இருக்கும்; இந்தப்
புத்தகத்தில் அத்தகைய புழுக்க மில்லை.

---

கவிஞர் வேலூர் ம. நாராயணன், எம். ஏ., அவர்கள் எழுதிய 'நிலாமுற்றம்' என்னும் கவிதை நூலுக்கு 1982-இல் வழங்கிய அணிந்துரை.

# தமிழ்ப்பாவை

மலர்ந்துபயன் படுகின்ற மலரைப் போன்றும்;
மணந்துபயன் படுகின்ற மங்கை போன்றும் ;
புலர்ந்துபயன் படுகின்ற கதிரைப் போன்றும் ;
பொழிந்துபயன் படுகின்ற மழையைப் போன்றும்;
கலந்துபயன் படுகின்ற தேனைப் போன்றும் ;
காப்பியங்கள் பயன்படுதல் வேண்டும் ; நாட்டில்
தலைசிறந்த காப்பியங்கள் தோன்று மாயின்
தாய்மொழிக்குப் புதுப்பெருமை வந்து சேரும்.

கண்ணகியின் கண்ணீரை நெருப்பாய் மாற்றிக்
காட்டியதோர் காப்பியத்தை இளங்கோ தந்தார்;
பண்பட்ட திருத்தக்க தேவர் என்பார்
பாட்டாலே கோட்டையொன்று கட்ட லானார் ;
எண்ணற்ற பாக்கள்தந்த பாவின் வேந்தர்
எழுச்சிமிகு காப்பியங்கள் படைத்துத் தந்தார் ;
தண்ணமுதப் பெருங்கவிஞர் சங்கர் லிங்கம்
'தமிழ்ப்பாவை' காப்பியத்தை வழங்கி யுள்ளார்.

ஆண்டாளின் திருப்பாவை பக்தர் தம்மை
ஆலயத்துக் கழைக்கின்ற பாவை யாகும்;
பூண்டிதனில் பயின்றவராம் இவர்தம் பாவை
புரட்சிசெயத் தூண்டுகின்ற பாவை யாகும்.
வாண்டையார் கல்லூரி தந்த சிங்கம்
வரலாற்றைப் படைக்கவந்த சங்கர் லிங்கம்.
நீண்டபுகழ் தரத்தக்க காப்பி யத்தை
நெட்டிமையார் போல்நன்கு பாடி யுள்ளார்.

பதினெட்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த முத்துப்
பழனியென்பாள், சான்றோர்கள் வியக்கும் **வண்ணம்**
அதிமதுரக் காவியமொன் றியற்றித் தஞ்சை
அரசனிடம் பரிசுபெற்றுள்; இவரும் இந்தப்
புதுக்கவிதை நூலுக்குப் பரிசு பெற்றுப்
புகழடைவார் என்றெண்ணிப் பூரிக் கின்றேன்.
முதற்கவிதை முதற்குழந்தை போன்ற தென்றுல்
முதற்பரிசு முதல்முத்தம் போன்ற தன்றே!

---

*கவிஞர் உரத்தநாடு சங்கரலிங்கம் அவர்கள் எழுதிய 'தமிழ்ப் பாவை' என்னும் கவிதை நூலுக்கு 1983-ஆம் ஆண்டு வழங்கிய அணிந்துரை.*

# மன்மத ராகங்கள்

காவியமும் ஓவியமும் தீட்டித் தந்து
    கலீல்கிப்ரான் புகழ்பெற்றார். வெர்டி என்பார்
ஓவியமும் காவியமும் தந்த தாலே
    உறங்காத புகழ்பெற்றார். முத்து வீரப்
பாவலரின் மூத்தமகன் வைத்ய லிங்கம்
    பாட்டெழுதிப் படம்வரைந்து பெருமை பெற்றார்-
சேவைசெய்த நாமக்கல் ராம லிங்கம்
    சிறப்புற்றார் ஓவியத்தால் காவி யத்தால்.

அத்தகையோர் போன்றவராம் என்றன் நண்பர்
    அமுதபா ரதியென்பார், நமது நாட்டில்
சித்திரங்கள் வரைவதிலும், சந்தத் தோடு
    செய்யுள்கள் புனைவதிலும் சமர்த்த ராவார்.
புத்தகமே இவருடைய சொத்தாம். பொங்கும்
    புதுமைகளே இக்கவிஞர் மதிக்கும் முத்தாம்.
சித்திரங்கள் இவருக்குச் சோறு போடும்.
    செய்யுள்கள் இவர்க்குரிய புகழை நாடும்.

இயலைப்போல், இசையைப்போல் இரண்டு நூல்கள்
இயற்றியபின் இக்கவிஞர், கார்கா லத்து
மயிலைப்போல், மயிலினது சாய லைப்போல்
மன்மதரா கங்களெனும் நூல்யாத் துள்ளார்.
கயல்விழியாள் ராதையவள் விழியின் வீச்சைக்
கண்ணபிரான் வாய்பேச்சைப் பதிவு செய்து,
குயிலோசைக் கவிஞரிவர், தமிழில் கீத
கோவிந்தம் புதிதாகப் பாடி யுள்ளார்.

பாதரச வெளிச்சத்தில், சிறப்பு மிக்க
பளிங்குமணி மண்டபத்தில் ஒவ்வோர் நாளும்
ராதைக்கும் கண்ணனுக்கும் லீலை. இன்ப
ரசலீலை. கொக்கோகக் குடும்ப வேலை.
மர்தரசி மிஞ்சுவதும், கமலக் கண்ணன்
மங்கையிடம் கெஞ்சுவதும், சிறந்த காட்சி.
ஆதலினல் அவ்வின்பக் காட்சி தன்னை
அற்புதமாய் இக்கவிஞர் வர்ணித் துள்ளார்.

பொன்னுக்கோர் பொட்டுவைத்து விடவா ? பூத்த
பூவுக்கோர் ஆடைகட்டி விடவா ? என்று
மன்னுபுகழ்ச் செல்வத்தை விட்டுச் சென்ற
மாயவநா தக்கவிஞன் கேள்வி கேட்டான்.
அன்னவனைப் போல்ராதை யிடத்தில் கண்ணன்
ஆனந்தக் கேள்விபல கேட்ப தாகக்
கன்னிச்சிந் தாமணியாம் இந்த நூலில்
காதற்சிந் துக்கவிஞர் தெரிவிக் கின்ருர்.

ஆயிரத்தெண் ணூற்றறுபத் தைந்தாம் ஆண்டில்
அச்சான நூல்கள்பல வற்றுள், சைவக்
கோயில்மணி ஓசைதரும் திருக்குற் றாலக்
குறவஞ்சி எனும்சிறந்த கவிதை நூலும்,
மேயபுரப் பாவலரின் பத்மா சூர
விலாசமெனும் ஓர்நூலும், இந்த நூலும்
பாயெடுத்து விரிக்கின்ற பருவப் பெண்ணைப்
படம்பிடித்துக் காட்டியுள்ள நூல்க ளாகும்.

உறுப்புநலம் கூறுவதைச் சான்றோ ரெல்லாம்
ஒப்புக்கொண் டிருக்கின்ற கார ணத்தால்,
கறுப்புநிறக் கவிராயன் ஒருவன், காமக்
கலசமெனும் மார்பகத்தைப் பால்மே டென்றான்
வெறியூட்டும் பெண்குறியை நாகப் பாம்பின்
விலாசமென்று சொன்னானோர் புலவன். அந்த
மறைவிடத்தை இக்கவியோ, உழுதற் கேற்ற
மன்மதப்பூ நிலமென்று சொல்லு கின்றார்.

கங்குலும் கரியநிற மங்குலு மிவளுடைய
பைங்குழற் கெதிரேநின்று மங்குதல்லவா?—இரு
கண்களுக்கு வேலும்சேலும் இங்கிணைநா மல்லவென்று
தங்கைவிரற் செங்கையிற் பதுங்குதல்லவா?
திங்களும் கதிருமிந்த மங்கையின் முகத்துக்கஞ்சி
அங்கமும் குறைந்துதினம் பங்கமடை யுதே—இவள்
விண்ணுலகப் பெண்ணரசியோ!—ஆஹா இவள்
விண்ணுலகப் பெண்ணரசியோ!

கும்பமும் குரும்பையொடு பம்பரமும் தும்பிலிரு
கொம்புமிவள் முலைக்கஞ்சி வெம்பிநிற்குதே—வயிறு
கோலத்தைக்கண் டாலிலையும் மாலுக்குச் சயனமாகி
ஓலமிட்டுப் பாற்கடலை நம்பிநிற்குதே!
கொம்பனையாள் சிற்றிடைக்கு உம்பரின்மின் னொளிக்குதே
பம்புமிவ ளல்குலைச்சர்ப் பப்படங்கண் டேங்குதிவள்
விண்ணுலகப் பெண்ணரசியோ!—ஆஹா இவள்
விண்ணுலகப் பெண்ணரசியோ!

என்றொருவர் தஞ்சைநகர் பாப்பு தாசன்
இவ்வாறு லாவணிப்பாட் டெழுதி யுள்ளார்.
இன்னொருவர் இவர்பெயரோ சித்ரம் பிள்ளை.
இக்கவிஞர் இன்பரசத் தெம்மாங் கென்னும்
மின்மினிநூல் ஒன்றெழுதிப் பருவப் பெண்ணின்
மேடுமுதல் கூடுவரை வர்ணித் துள்ளார்.
அன்னவர்க்கிங் கிணைத்தவராய்த் தெரிய வில்லை,
அமுதபா ரதியென்னும் பாட்டுப் பிள்ளை.

பண்பட்ட ஓவியரின் புதிய நூலோர்
பனிக்கவிதை நூலென்பேன். இந்த நூலை,
வெண்பட்டுத் துணியென்பேன். ஊர்ந்து செல்லும்
வெண்ணிலவும் இதையுடுத்த விரும்பு மென்பேன்.
எண்பட்ட பக்கங்கள் தோறும் செய்யுள்
இலக்கியத்தின் முன்னேட்டம் நினைவின் நீட்டம்.
கண்பட்டால் இதன்மீது பட்டும்; உங்கள்
கைபட்டால் இந்நூலில் பட்டும் இன்றே.

---

ஓவியக் கவிஞர் அமுதபாரதி அவர்கள் எழுதிய "மன்மத ராகங்கள்" என்னும் கவிதை நூலுக்கு 1984-இல் வழங்கிய அணிந்துரை.

# போர்க்களத்தில் பரதம்

கரு 'வெனும் பகுதி நீண்டு
காரென ஆயிற் றென்பர்.
பொரு 'வெனும் பகுதி நீண்டு
போரென ஆயிற் றென்பர்.
அருளுதல் அன்பாம்! நாட்டில்
ஆத்திரம் பூத்தால் போராம்.
உருவிய வாளின் வெற்றி
உயிர்க்கொலை நிகழ்ச்சி யாகும்.

அடைமொழித் தமிழர் வீரம்
அஞ்சாத வீர மாகும்.
படுகளம் தன்னில் அன்று
பாரதப் போர்வீ ரர்க்கு
விடுமுறை இன்றிக் கொக்கின்
விரல்நகம் போன்ற சோற்றை
ஒடிபடா ஊக்கத் தோடே
உதவினன் உதியன் சேரன்.

போர்வாழ்க்கை நம்நாட் டார்க்குப்
புதுவாழ்க்கை அன்று ; வீர
வேர்வாழ்க்கை அன்றும் இன்றும்
விடுதலைக் குரிய வாழ்க்கை.
தேர்வாழ்க்கை வந்த தாலே
திறன்குன்றி, வீரம் வீழ்ந்து
நார்வாழ்க்கை, பக்தி வாழ்க்கை
நரிவாழ்க்கை வளர்ந்த திங்கே !

பாரினில் சிறப்பு மிக்க
படைகொண்டு பகைவர் தம்மை
நேரினில் நின்று வென்ற
நிகழ்ச்சியைப் போர்க்க ளத்தில்
பாரதம் என்னும் நூலாய்ப்
படைத்துள்ள ஓடை யானின்
சீரிய நூலாம் இந்தச்
சிறுநூலோர் பரணி யாகும்.


தாழிசை, விருத்தம், வெண்பாத்
தளைகொண்ட கும்மிப் பாட்டால்,
ஏழிசை இன்பத் தோடும்,
இழுமெனும் ஓசை யோடும்,
வாழிநூல் வழங்கிச் செங்கை
மறவரை வாழ்த்தி, நாட்டின்
சூழலை விளக்கி நன்கு
சுடச்சுடப் பாடி யுள்ளார்.

ஓடையான் நூலின் பாடல்
உணர்ச்சியை ஊட்டும் பாடல்.
சோடையே இல்லாப் பாடல் ;
துடித்தெழச் செய்யும் பாடல் ;
மேடைமீ தேறி நின்று
விம்மிதத் தோடு சொன்னல்,
நாடெலாம் அதிரும் ! கேட்டால்
நமக்கெலாம் வீரம் பொங்கும்.

விடுதலை பெற்ற நாட்டை
விழுங்கிட முயற்சி செய்த
கொடியரை வீழ்த்தி, வெற்றி
கொண்டநம் இந்தி யாவின்
நடைமுறைப் போர்நூல் இந்நூல்.
நல்லநூல் ! சிறப்பு மிக்க
முடிவுரை இதற்கு வீடு !
முகவுரை இதற்கு வாசல் !

---

*கவிஞர் சைதை ஓடையான் அவர்கள் எழுதிய 'போர்க்களத்தில் பாரதம்' என்னும் கவிதை நூலுக்கு 1966-ஆம் ஆண்டு வழங்கிய அணிந்துரை.*



# பொழுது புலரட்டும்

கதிர்ச்செந்நெல் விளைகின்ற ஊராம், மட்டக்
களப்பினிலே பிறந்தமுகில் வாணன் என்பார்
அதிர்வேட்டுக் கெதிர்வேட்டுக் கவிஞ ராவார்
அத்தகைய பூகம்பக் கவிஞர் யாத்த
புதுநூலைப் பொழுதுபுல ரட்டு மென்னும்
போராட்டப் பிரகடனக் கவிதை நூலை
உதிக்கின்ற வெளிச்சத்தில் படித்தேன். பாடல்
ஒவ்வொன்றும் துப்பாக்கித் தும்ம லாகும்.

கொடுமைபல புரிந்துவரும் சிங்க ளத்தார்
குழுவுக்கும், தமிழீழம் கேட்ப வர்க்கும்
விடுதலைப்போர் நடைபெற்றுக் கொண்டி ருக்கும்
வேளையிலே, இக்கவிஞர் இந்த நூலைப்
படையெடுக்க விடுத்துள்ளார் பகைவர் மீது !
பாடல்களை அப்பகைவர் படிப்பா ராயின்,
தொடைநடுக்கம் ஏற்பட்டே தீரும் ஈழம்
துண்டுபடும் என்பதனைப் புரிந்து கொள்வர்.



2767—5

அந்தரத்துச் சந்திரனை உற்று நோக்கி
அரசாங்கப் பெருங்கவிஞன் ஒருவன், வானச்
சந்திரனே துள்ளாதே இப்போ துன்றன்
தலையில்கால் வைத்திடநான் செய்வேன் என்றான்.
சந்திரனெனத் துள்ளாதே பிரேம தாசா !
சதிகாரா! உனைநானே மிதிப்பேன் என்று
முந்துதமிழ்க் கவிமன்றத் தலைவ ரான
முகில்வாணன் மார்தட்டிக் கூறு கின்றார்.

நிறம்மாறு திருக்கின்ற பாலி னோடு
நீர்சிறிது கலந்திருப்பின், அன்னம் என்னும்
பறவையதைப் பிரித்துண்ணும். நாங்கள் அந்தப்
பறவையினைப் பின்பற்ற விரும்பு கின்றோம்.
பிறவினையும், தன்வினையும் இருக்கும் போது
பிரிவினையென் றோர்வினையும் இருக்க லாமே ?
தறுக்கர்களே இதற்கென்ன சொல்கின் றீர்கள்
தமிழீழம் தருதற்கேன் மறுக்கின் றீர்கள் ?

தூங்குகின்ற நேரத்தில் வாங்கும் மூச்சு
சுழிமாறிப் போனாலும் போச்சென் பார்கள்.
நாங்களினிச் சாவதற்கும் அஞ்சோம்; ஈழ
நாடுபெறப் போராடும் எங்கட் கின்று
மாங்கனியோ, பலாக்கனியோ இனிக்க வில்லை.
மரணந்தான் இனிக்கிறது தெரிந்து கொள்வீர்.
வேங்கைகளோ மான்களைக்கண் டஞ்சும் உங்கள்
வேடத்தை யாமறிவோம் எனச்சொல் கின்றார்

தாமரையின் மொட்டைப்போன் றமைந்தி ருக்கும்
தனித்தீவாம் இலங்கையிலே அந்த நாளில்
பூமிபுகழ் இராவணனும், மற்றை யோரும்
பொறுப்போடும் சிறப்போடும் ஆண்டு வந்தார்.
நாமிந்த வரலாற்றை மறந்து விட்டோம்.
நண்டுமொழிச் சிங்களரை நம்பிக் கெட்டோம்;
சாமிகளை நினைக்கின்றோம். நமது நாட்டின்
சரித்திரத்தை நாம்நினைத்துப் பார்ப்ப தில்லை.

என்றிந்தக் கவிராயர் வருந்து கின்றார்
இத்தகைய தோர்வருத்தம் எனக்கும் உண்டு.
நன்றியினை மறந்தாலும் அஃதே போன்று,
நாட்டினது வரலாற்றை மறந்திட் டாலும்,
குன்றைப்போல் குன்றிப்போய் விடுவோம். வாழ்வில்
குறிக்கோளே இல்லாமல் வாழ்ந்தோ ராவோம்.
அன்றுமுதல் இன்றுவரை நடந்த வற்றை
அறிந்துகொள்ளல் அவரவரின் கடமை யன்றோ?

தங்கம்மா தவமிருந்து பெற்ற மைந்தர்
தமிழீழ விடுதலைப்போர்க் களத்தில் வந்து
சிங்கத்தின் சீற்றத்தோ டுலவும் வீரர்
தீட்டியுள்ள பாடல்களைப் படிப்போ மாயின்
அங்கத்தில் சூடேறும்; கிழவர் கட்கும்
ஆவேசம் உண்டாகும். விரிந்த வானில்
தொங்கிக்கொண் டிருக்கும்வெண் ணிலாவி னுக்கும்
சூடேறும்; சூரியனாய் அதுவும் மாறும்.

மழைமேகம் வாய்திறந்தால் மின்னல் தோன்றும்
மற்றிந்நூல் வாய்திறந்தால் புரட்சி தோன்றும்
இழைவிளக்கு நின்றிமைக்கத் தொடங்கி விட்டால்
இருள்விலகும்; தமிழீழம் அமைத்தற் கான
வழிவகையை அச்சமின்றிக் கூறும் இந்நூல்,
வரலாற்றில் இடம்பெற்று நிலைத்தி ருக்கும்.
முழுப்புகழுக் குரியதொரு நூலைத் தந்த
முகில்வாணன் வாழ்கவென வாழ்த்து கின்றேன்.

---

கவிஞர் முகில்வாணன் அவர்கள் எழுதிய "பொழுது புலரட்டும்" என்னும் கவிதை நூலுக்கு 1984—இல் வழங்கிய அணிந்துரை.

# இன்னொரு விடுதலை

அன்னிபெசண்ட்; முதறிஞர் பண்டிட் குன்ஸ்ரு,
அமெரிக்க நாட்டதிபர் ஜிம்மி கார்ட்டர்,
தென்னகத்துப் பெருநடிகர் காளியென் ரத்னம்
சிவாஜிகணே சன், தணிகை உலக நாதன்
மன்னுபுகழ்க் குரியஇளங் கோவன் என்னும்
வசனகர்த்தா முதலானோர் பிறந்த நாளில்
இன்னுமொரு விடுதலையென் றோர்நூல் தந்த
எழிலரசும் பிறந்திட்டார் தொண்டை நாட்டில்.

ஒவ்வொருவர் முதல்நூலே மோனை யாகும்
ஒன்றுவந்த பின்வரும்நூல் எதுகை யாகும்
அவ்வையெனும் கவிக்கிழவி பலநூல் செய்தாள்
அவற்றுளெது முதல்நூலென் றறிதற் கில்லை.
செவ்விளநீர் போன்றினிக்கும் இந்த நூலே
சென்னிகுளக் கவிவேந்தன் முதல்நூ லாகும்
இவ்விளைஞர் முதல்நூலோர் ஆய்வு நூலாம்
இவர்வழங்கும் இந்நூலே இரண்டாம் நூலாம்.

மண்கொடுத்தும் பொன்கொடுத்தும் ஆத ரித்த
மாமல்ல புரத்துவள்ளல் செவந்தா னுக்கோ
பண்பட்ட கவிராயன் ராமச் சந்த்ரன்
படைத்திட்டான் கோவையெனும் பிரபந் தத்தை
பெண்கொடுத்த மாமனுக்கே இந்த நூலைப்
பெருங்கவிஞர் காணிக்கை யாக்கி யுள்ளார்
பண்பாட்டை வெளிப்படுத்திக் காட்டும் இந்தப்
பாவலனைத் தனித்தமிழால் வாழ்த்து கின்றேன்.

எல்லாம்நன் கறிந்தஇந்து தேசம் ஆனல்
இப்போதோ நிலைமைமிக மோசம் என்று
பல்லாண்டு கட்குமுன்பே பாடி யுள்ளார்
பாஸ்கரதாஸ் எனும்கவிஞர் இந்தி யாவின்
எல்லையென இருப்பதுவும் கரையே, இங்கே
எல்லாமாய் இருப்பதுவும் கறையே என்று
பல்லவிக்கோர் பல்லவியைப் போன்று குட்டி
பாஸ்கரதாஸ் எனுமிவரும் பாடி யுள்ளார்.

வள்ளுவரோ பிறைநிலவை "அறுவாய்" என்றார்
மற்றிவரோ "மொட்டுநிலா" எனச்சொல் கின்றார்
கள்ளருந்திப் பாழ்பட்ட கம்ப தாசன்
கயல்விழியை வானத்தின் வாசல் என்றான்
பள்ளியறைக் காதலியின் விழியை இந்தப்
படைப்பாளர் கனவுகாணும் மீனென் கின்றார்
தெள்ளுதமிழ்க் கவிஞர்களே கேளீர் தண்ணீர்த்
[illegible]வன்றே அதோதெரியும் தீவென் கின்றார்.

பூட்டாத வில்லதுதான் வான வில்லாம்
    பூமிக்கும் காதுண்டாம் அதுதான் புற்றும்
தீட்டாத அம்பதுதான் மழைநீர்க் கோடாம்
    தீக்குடுமி தான்புகையாம் என்றிவ் வாறு
நாட்டாண்மைக் காரன்மகன் தரங்கம் பாடி
    நகரத்துப் பெரும்புலவன் பாட லானான்.
மீட்டும்யா ழிசைவிரும்பும் இவரோ ஈர
    மேகத்தின் பாலதுதான் மழையென் கின்றார்.

எண்கொடுத்தால் எழுத்துவரும்; பருவ காலம்
    இடங்கொடுத்தால் மேகம்வரும்; ஒருவ னுக்குப்
பெண்கொடுத்தால் உறவுவரும் கலைஞன் என்னும்
    பேர்கொடுத்தால் சிறப்புவரும்; பக்தர் இங்கே
மண்கொடுத்தால் குங்குமமே வருமாம்! என்ன
    மதியீனம்! ஏமாற்றும் வித்தை! வீட்டில்
எண்ணெயில்லை, அரிசியில்லை; உப்பு மில்லை,
    எதுகொடுத்தால் இவைகிடைக்கும் எனக் கேட்கின்றார்.

கல்லறையின் அருகினிலோர் கவிஞன் நின்று
    கண்ணீர்விட் டழுகின்றான் என்னும் பாடல்
மல்லிகைப்பூச் செண்டன்று பெரியார் தொண்டன்
    மனக்குமுறல் வைதீகப் பாதை நோக்கிச்
செல்வோரைக் கண்டிக்கும் கவிதை கண்ணீர்த்
    திவலைகளே வாய்திறந்து பாடும் பாடல்
இல்லையில்லை எனச்சொல்லி வளர்ந்தோர் இன்றே
    இருக்கின்ற தென்பானேன்?...எனக்கேட் கின்றார்.

கண்ணகியும் அன்றழுதாள்; கவிஞர் கோமான்
    கம்பர்மகள் காவிரியும் அழுதாள், ஆங்கோர்
பெண்ணரசி பத்மினியும் அழுதாள் தோழிப்
    பெண்ணழுதாள் நாமதனைப் பார்க்க வில்லை
கண்ணிமைகள் அடைகாக்கும் முட்டை உப்புக்
    கண்ணீரென் றெடுத்துரைக்கும் இவர்க்கு நாமோ
எண்ணூறு கோடிப்பொன் தரலாம் பாரி
    இன்றில்லை இருப்பினவன் கொடுத்தி ருப்பான்.

ஆடகப்பொன் அம்பொன்னும் கரிகாற் சோழன்
    அரண்மனைப் பொன்துளைப் பொன்னும் பாவின்வேந்தர்
நாடகநூல் பலவற்றை ஆய்வு செய்த
    நற்கவியின் நூலிதுவோ ஆணிப் பொன்னும்
மூடமதி கண்டனமென் றோர்நூல், பாட்டு
    முத்திரையா லாகியநூல் அந்த நூலைக்
கோடையிடிக் கொப்பிட்டால் இதைநான் பாபர்
    கொண்டுவந்த பீரங்கிக் கிணையாய்ச் சொல்வேன்.

சீர்காழி கண்ணுடைய வள்ளல் என்பார்
    தீட்டியநூ லாம்ஒழுவில் ஒடுக்கம் என்னும்
பேர்பெற்ற நூலதனை இராம லிங்கப்
    பெருந்துறவி எடுத்தெடுத்துப் படிப்ப துண்டாம்.
ஏர்நடத்தும் தமிழகத்தில் உள்ளோ ரெல்லாம்
    இந்நூலை எடுத்தெடுத்துப் படிப்பா ராயின்
சீர்பெறலாம் சிறப்புமிகப் பெறலாம் நன்கு
    சிந்திக்கும் ஆற்றலையும் பெறலாம் என்பேன்.

---

கூ. வ. எழிலரசு, எம்.ஏ. அவர்கள் எழுதிய 'இன்னொரு விடுதலை' என்னும் நூலுக்கு 1984-இல் வழங்கிய அணிந்துரை.

# சந்தனக்கதவு

விரித்துரை போன்ற கீர்த்தி
வேந்தர்கள் வாழ்ந்த கோட்டைச்
சரித்திரக் கதவோ, வீரர்
தடந்தோள்போல் உறுதி கொண்ட
மரத்தினால் அமைந்தி ருக்கும்
வறுமைமிக் குடையோர் வீட்டின்
தரித்திரக் கதவோ, மூங்கில்
தட்டியால் அமைந்தி ருக்கும்.

தனிப்பெரும் புலவர் செய்யும்
சந்தனக் கதவோ, செய்யுள்
வனப்பொடு விளங்கும்; கல்வி
வாசனை வீசும். வார்த்தைப்
பனித்துளி சிந்தி யுள்ள
பாத்திர மான இந்நூல்.
நினைப்பினை ஈர மாக்கும்.
நிச்சயம் திறமை சேர்க்கும்.

மிகப்பயன் அளிக்கும் செய்யுள்
விளையாடும் இந்த நூலைத்
தொகுத்தவர் மூவர்; பாடல்
தொடுத்தவர் முப்பத் தைவர்.
முகத்தையும், காதல் பேச்சின்
முடிவையும் குறிக்கத் தக்க
சுகத்துறைப் பாடல் இந்தத்
தொகுப்பினில் சிறிது மில்லை.

முகப்பினில் ஞாயி றுண்டு;
முழுநீல வான வட்டம்
நகர்த்திடும் நிலவு முண்டு;
ஞானக்கண் பாட லுண்டு;
நுகத்தடி ஓட்டைக் குள்ளே
நுழைத்திடும் கயிற்றைப் போன்று
மகத்துவம் பேசி ஏய்க்கும்
வஞ்சகப் பாட லில்லை.

சுற்றியே வளைத்துப் பேசும்
தொன்மொழி வல்லோர், ஈரம்
வற்றியே செத்துப் போன
மரத்தினை 'வானம்' என்றார்.
மற்றதை ஒருவர் இங்கே
'மரப்பிணம்' என்று கூறிக்
கற்பனைக் குதிரை பூட்டிக்
கவிதைத்தேர் ஓட்டி யுள்ளார்.

நிலைப்பவை நீல வானம்
நெருப்பொடு நீரென் றாலும்,
கலைப்பயன் வழங்க வல்ல
கவிதையும் நிலைத்து நிற்கும்.
இலைப்பயன் ஆட்டுக் கென்றால்,
இதன்பயன் நமக்காம் பாட்டின்
தலைப்பினை வாசித் தாலே
தலைவலி பறந்து போகும்.

'சந்தனக் கதவு' என்னும் கவிதைத் தொகுப்பு நூலுக்கு 1971-இல் வழங்கிய அணிந்துரை.

# கலாவள்ளி காவியம்

கப்பலை நங்கூ ரந்தான்
காபபாற்றும். அறிஞர் போற்றும்
ஒப்பற்ற சிறந்த நூலே
ஒருவனைச் சிறந்தோ னாக்கும்.
இப்போது பினாங்கில் வாழும்
இளங்கவி காதர் சுல்தான்
அப்படிப் பட்ட நூலை
அருமையாய் இயற்றி யுள்ளார்.

நிலாவெள்ளிக் கவிஞர் சுல்தான்
நினைவினில் உதித்தெ ழுந்த
கலாவள்ளி என்னும் இந்தக்
கவிதைநூல், சமுதா யத்தில்
உலாவரும் ஏற்றத் தாழ்வை
ஒழித்திடும் இதனால் நல்ல
பலாபலன் நமக்கு முண்டு
படைத்தார்க்கும் கீர்த்தி யுண்டு.

---

பினாங்குக் கவிஞர் ஓ.எம். காதர் சுல்தான் அவர்கள் எழுதிய 'கலாவள்ளி காவியம்' என்னும் கவிதை நூலுக்கு 1977-இல் வழங்கிய அணிந்துரை: